தொகுதி, 4

ஜன - பிப்ரவரி, 1924

72
n211, N23TA
N24. 1-4
200516

1543

ஸ்ரீ

# தமிழா

" நவிறொறு நூனயம் போலும் பயிறொ
பண்புடை யாளர் தொடர்பு."
" கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்
புண்ணுடையர் கல்லா தவர்."—திருக்குறள்

மலர்-க. { உருத்ரோத்காரி ஸு தை மீ 1924ஸு ஜனவரி—பிப்பிரவரிமீ } இத

## விஷயம்.


| | |
|---|---|
| வாருசி சரிதம்—பத்திராசிரியர் | |
| சோழவரசர்கள்—அ. கோபாலையர் அவர்கள் | |
| புகையிலை—ம. சுந்தரபாண்டிய ஒதுவார் அவர்கள் | |
| மனம்—ராமாராவ் அவர்கள் | |
| சம்பகமாலினி—கே. இராமநாதையர் அவர்கள் | 136 |
| விடுகதை வினு விடை— | 138 |
| சூர்யோதயம்—மாணவன் | [illegible] |
| ஸத்குரு மஹிமை—கே வி. சுப்பிரமணிய சாஸ்திரி | 142 |
| காமந்தகீய நீதிசாரம்—பத்திராசிரியர் | 146 |
| பிர்ம்மசாம்ராஜ்ஜியப் பிராது—அரு. முத்த செட்டியார் | 148 |
| வைத்தியக்குறிப்பு—C. R. S. ராகவையங்கார் அவர்கள் | 150 |
| தினமணி (சூரியன்)—அ. சங்கரசாஸ்திரி அவர்கள் | 152 |
| அனுபவ ஸங்கீதம்—எல். முத்தையா பாகவதர் அவர்கள் | 155 |
| மதிப்புரை—பத்திராசிரியர் | 156 |
| பத்திரிகை பரிபாலனக்கொடை } பொறுப்பாளர். | 158 |
| விடுகதை வினு | 159 |
| பொது சமாச்சாரம் | 159 |


சு. ஸ்ரீநிவாசையங்கார்—பத்திராசிரியர்.

வேம்பத்தூர், சிலேடைப்புலி, பிச்சுவய்யர் குமார்,
பி. பாஸ்கரய்யர்—பொறுப்பாளர்.

29. மேலாவணிமூலவீதி, மதுரை.

வருடச்சந்தா ரூ. 2] வெளிநாடுகளுக்கு ரூ. 3 [தனிப்பிரதி அணா 4.

Copy Right Registered.

உ

# ண்யம் நிறைந்த

## ஸ்ரீதேவி விலாசம்.

# புரு. ராம, கு. மீ.

## பலசரக்கு மளிகை.

**மேலாவணிமூல வீதி, மதுரை.**

**அன்பர்களே!**

குங்குமப்பூ, கோரோசனை, பச்சைக்கர்ப்பூரம், தேன், நெய், எண்ணெய்த்தினுசுகள், மருந்துச்சரக்குகள், காப்பிக்கொட்டை பல தினுசுகள், அரிசி, குருணை, பெருங்காயம் பலதினுசுகள், பருத்தி விதை, உழுந்தங்குருணை, பெங்களூர் சீயக்காய்ப்பவுடர், சோப்புத் தினுசுகள், பொத்தான், சீப்பு, நன்னாரி சரபத்தினுசுகள், குல்கந்து, மெழுகுவர்த்தி, சென்டுத் தினுசுகள், சித்தாதிகள் முறைப்படி செய்த ஸ்நானபரிமளத் தலம், பற்பொடி, ரணம், வெட்டுக்காயங்களை ஆற்றக்கூடிய களிம்பு, புகையிலை, பேணிரவைத் தினுசுகள் முதலிய யதார்த்தமான அநேக பலசரக்குச் சாமான்களை நம் நண்பர்கள் நேரில் பார்த்து வாங்கி ஆனந்திக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கிறோம்.

பலசரக்குகள் பூராவும் கல்நாவிச் சுத்தமாகப் புடைத்தே இருக்கும்.

உண்மையாகக் கொடுக்கிறோம். எல்லோரும் சௌக்கியத்தை யடைய வேண்டியது. சுபம். சுபம்.

## மனம்போல வாழ்வு சத்தியம்.

---

**விளம்பர விகிதம்.**

| | | |
|---|---|---|
| மாதம் பக்கம் ஒன்றுக்கு | ரூ | 4—0—0 |
| ,, அரைப்பக்கம் ,, | ,, | 2—8—0 |
| ,, கால் பக்கம் ,, | ,, | 1—8—0 |

பொறுப்பாளர், தமிழ்ராசு ஆபீஸ்,
மதுரை.

ஸ்ரீ

# தமிழ்ராசு.

—(ː)—

**வணக்கம்.**

அங்கயற்கண்ணம்மை.

"பொங்குருச் செல்வங் கல்வி பொருவிலா வாய்மை தூய்மை
இங்கெமக் கருள வல்ல வினையிலா வெம்பி ராட்டி
பங்கயத் தடஞ்சூழ் கூடற் பவளமால் வரையை நீங்கா
அங்கயற் கண்ணி மங்கை யடிக்கம லங்கள் போற்றி."

பெரும்பற்றப்புலியூர் நம்பி.

| | | |
|---|---|---|
| மலர்–க. | உருத்ரோத்காரி ஞு தை மீ<br>1924ஞு ஜனவரி—பிப்ரவரிமீ | இதழ்–ச. |

(கதாசரித் சாகரம்.)

## வரருசிசரிதம்.

---

88–ம் பக்கத்தொடர்ச்சி.

அரசன் அதனையறிந்து அம்மறையவனை அப்பொழுது கொல்ல வேண்டாம் என்று நிறுத்திவிட்டு வரருசியை நோக்கி உலர்ந்த மீன் ஏன் நகைத்தது என்று வினவினன். வரருசி அதனை நான் அறிந்து சொல்கிறேன் என்று யோகநந்தனிடம் கூறிவிட்டுத் தனிமையான ஓரிடத்தில் உட்கார்ந்துகொண்டு, மீன் நகைத்த காரணத்தைச் சிந்தித்துக்கொண்டிருந்தான். அப்பொழுது ஸரஸ்வதி தேவியானவள் அவனெதிரில் தோன்றி "நீ இன்றிரவு இப்பனைமரத்தில் ஏறியொளித்திரு. அப்பொழுது மீன் நகைத்தற்குரிய காரணத்தை ஐயமின்றியறிந்து கொள்வாய்" என்று கூறி மறைந்தாள். வரருசி அத்தேவி கூறிய வண்ணமே அன்றிரவில் அப்பனையின்மேல் ஏறியிருந்தான். நள்ளிரவில், அம்மரத்தின் கீழே, தன்னுடைய மக்களுடன்கூட ஒரு பயங்கரமான அரக்கி வந்துநிற்பதை வரருசிகண்டான். அப்பொழுது உண்பதற்கு ஏதாவது தருவாயாக என்றுகேட்ட தன் மக்களைநோக்கி அவள், "சிறுவர்களே! நாளைக்காலையில் உங்களுக்கு வேதியனுடைய மாமிசம் கொடுக்கிறேன். அதுவரையிலும் பொறுத்திருங்கள். இப்பொழுது அம்மறையவன் கொல்லப்படுவான் என்று நினைத்தேன்;

உ08516

கொல்லப்படவில்லை. நாளைக்குக் கொல்லப்படுவான்; அப்பொழுது நகுகிறேன்" என்றாள். அதனைக்கேட்ட அவளுடைய சிறுவர்கள், "இப்பொழுது என்னகாரணத்தால் அம்மறையவன் கொல்லப்படவில்லை" என்றுவினவ, அரக்கி, "சிறுவர்களே! கொல்லப்படக் கொண்டுபோகும் அவ்வேதியனை நோக்கி, ஓரிறந்த மீன் நகைத்தது என்னும் காரணத்தால், அரசன் இப்பொழுது அவனைக் கொலைசெய்யவில்லை" என்றாள். திரும்பவும் அச்சிறுவர்கள், "தாயே! அம்மீன் ஏன் நகைத்தது?" என்றுவினவ, அரக்கி, "இவ்வரசனுடைய இராஜ்யத்திலுள்ள பெண்டிர்யாவரும் கெடுக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். அந்தப்புரத்தில் ஆடவர்கள் பெண்வேடம் பூண்டுகொண்டு மறைந்தொழுகுகிறார்கள். அவற்றையெல்லாம் இவ்வரசன் அறியாமல் ஒரு குற்றமுமற்ற அம்மறையவனைக் கொலை செய்கின்றானே என்று அவ்வுயிரற்ற மீன் நகைத்தது" என்று கூறினாள்.

வாருசி, அதனைக்கேட்டு, அவர்கள் சென்றபிறகு அம்மரத்திலிருந்து கீழே இறங்கி, விடியற்காலையில் அரசனுக்கு மீன் நகைத்ததன் காரணத்தைத் தெரிவித்தான். அரசன் அதனைக்கேட்டு அந்தப் புரத்தையடைந்து பரிசோதித்துப் பார்க்கப் பெண்வேடம் கொண்ட ஆண்மக்கள் இருப்பதைக்கண்டு, வாருசிகூறியது உண்மை என்று தெரிந்து வாருசியை வெகுமானித்து அம்மறையவனையும் கொலையிலிருந்து விடுவித்தான். அரசனுக்கு நேர்ந்த இத்தகைய அவமானத்தை வாருசி போக்கி அரசனைத் துன்பமற்றவனாகச்செய்தான். இதுநிற்க,

பின்னர் ஒருகால் புதியவனான சித்திரம் எழுதுவோன் ஒருவன் அரசனையடைந்து தான் அத்தொழிலில் வல்லோன் என்பதைத் தெரிவிக்க, அரசன் தன்னையும் தன் தேவியையும் படம் எழுதிக் கொண்டுவரச் சொன்னான். அவன் அவ்விதமே அவ்விருவரையும் வரைந்து அப்படங்களை அரசனிடம் கொடுத்தான். அப்படங்களில் வரையப்பட்ட உருவங்கள், வார்த்தைமாத்திரம் கூறவில்லையே தவிர மற்ற எல்லா விஷயங்களிலும் அவை உயிருள்ள உருவங்கள் போலவே காணப்பட்டன. அவற்றைக்கண்டு அரசன் சித்திரமெழுதுவோனை வியந்து அவனுக்கு வெகுமதியளித்து அப்படங்களைச் சித்



திர சாலையில் வைக்கும்படி கட்டளையிட்டான். அப்படங்களும் அவ்விதமே சித்திரசாலையில் வைக்கப்பட்டன.

அப்பொழுது ஒருநாள் வாருசி, அப்படங்கள் வைக்கப்பட்டிருக்குமறையை யடைந்து அப்படங்கள் எழுதப்பட்டிருக்குமழகை வியந்து கொண்டாடினான். அவன் இராஜமஹிஷியின் படத்தைப் பார்த்து, இது மிக்கஅழகுள்ளதாக இருந்தாலும் மற்ற அவயவங்களின் இலக்கணத்தைப் பார்க்கும்பொழுது மேகலையை யணிந்து கொள்ளக்கூடிய இடையின் கீழ்ப்பாகத்தில் ஒருசிறு மறு இருக்க வேண்டும் என்று சாமுத்திரிகாலக்ஷணத்தின்படி யறிந்து அப்படத்தின் அவ்விடத்தில் எழுதுகோலை எடுத்து ஒருசிறு மறுவை எழுதிவிட்டுச் சென்றான். பின்னர் அரசன் அவ்விடத்தையடைந்து பார்க்கத் தேவியின் படத்தில் புதிதாக ரஹஸ்யமான இடத்தில் ஒருமறு எழுதப்பட்டிருப்பது கண்டு, இங்ஙனம் செய்தது யார் என்று அங்கு நின்றவர்களை உறுத்துக்கேட்க, அவர்கள் யாவரும் வாருசியே அம்மறுவினைச் செய்தது என்று கூறினார்கள். அதனைக்கேட்ட அரசன் மிக்க சினமடைந்து 'தேவியினுடைய மறைவான இடத்திலுள்ள மறுவை வாருசி எவ்விதம் அறிந்தான். அது என்னைத்தவிர மற்றவர்கள் அறிவதற்கு நியாயமில்லையே; அவன் நமது அந்தப்புரத்தில் நுழைந்து பெண்டிரைக் கெடுத்திருக்க வேண்டும்; அதுபற்றியே அவன் நமது அந்தப்புரத்தில் பெண்வேடம்கொண்ட ஆண்மக்கள் இருக்கின்றனர் என்று கண்டறிந்தனும்' என்று தனக்குள் கருதித் தனது இயல்பான பகைவனாகிய சகடாலனையழைத்து 'வாருசி என் தேவியைக் கெடுத்துவிட்டமையால் நீ அவனைக் கொலைசெய்துவிட்டு எனக்குத் தெரியப்படுத்துக' என்று கட்டளையிட்டான். கயவர்களுடன் நட்புக்கொண்டு அவர்களுக்கு நன்மையைக் கூறுபவர்கள் இவ்விதமான கதியையடைய வேண்டியதே.

அரசன் கூறியதைச் சகடாலன்கேட்டு வெளியில்வந்து, "வாருசியைக் கொல்லும் வல்லமை என்னிடத்தில் ஏது? அன்றியும் அவன் தெய்வத்தன்மை பொருந்திய அறிவுள்ளவன். அதனுடன் அவன் என்னை ஆபத்திலிருந்தும் காப்பாற்றினவன். இவற்றிற்கெல்லாம் மேலாக அவன் ஒரு பிராமணனாக இருக்கின்றான்; ஆதலின்

எந்தவழியாகப் பார்க்கினும் அவனைக் கொல்லக்கூடாது. ஆதலின் நான் அவனை இப்பொழுது மறைத்து வைத்திருப்பேன்" என்று கருதி வாருசியையடைந்து அரசனுக்குண்டாகிய அகாரணமான கோபத்தையும் அதனால் அவன் வாருசியைக் கொலைசெய்யக் கட்டளையிட்டதையும் கூறிச், சகடாலன் தான் அவ்விதம்செய்யப்போவதில்லை என்றும், அதற்குமாறாகவேறோருயிர்ப்பிராணியைக்கொன்று அதன் இரத்தத்தை அரசனுக்குக் காட்டிவிட்டு வாருசியைக் கொன்றதாகக்கூறி அவனைத் தன்னுடைய இல்லத்திலேயே மறைவாகவைத்துக் காப்பாற்றப்போவதாகவும் கூறினான். வாருசி, சகடாலன்கூறிய வண்ணமே அவனுடைய வீட்டில் மறைந்து வாழ்ந்து வந்தான் சகடாலனும் இரவில் ஒருயிர்ப்பிராணியைக் கொன்று வாருசி கொல்லப்பட்டுவிட்டான் என்று பிரசித்தப்படுத்தினான்.

இவ்விதம் தன்னிடத்தில் அன்புவைத்துள்ள சகடாலனை நோக்கி, வாருசி, "என்னை மற்றவர்களால்கொல்லமுடியாது. எனக்கு ஒரு இராக்ஷஸன் நண்பனாக இருக்கின்றான். அவனை நான் நினைத்தமாத்திரத்தில் என் எதிரில்வந்துநின்று நான் விரும்பினால் இவ்வுலகத்தையும் விழுங்கிவிடுவான். அவனால் இவ்வரசனைக் கொன்றுவிடலாம் என்று நீகூறுமிடத்து, இவ்வரசன் என்னுடைய தோழனான இந்திரதத்தனும். அன்றியும் மறையவன்; ஆதலால் நான் அவனைக் கொல்ல விரும்பவில்லை" என்றுகூறச்சகடாலன் வாருசியை நோக்கிச் "சுவாமி! நான் அவ்விராக்ஷஸனைப் பார்க்கவேண்டும் எனவிரும்புகின்றேன்" என்றுகூற, வாருசி அப்பொழுதே அவ்விராக்ஷஸனை மனத்தினால் நினைக்க அவன்வந்து எதிரில்நின்றான். அவனைச் சகடாலன் கண்டு அச்சமும் வியப்புமடைந்தான். பின்னர்ச் சிறிதுபொழுதில் இராக்ஷஸன் மறைந்துவிடச், சகடாலன் வாருசியை நோக்கிச் "சுவாமி! உமக்கும் இவனுக்கும் தோழமையுண்டாயது எவ்விதம்" என்றுவினவ, வாருசி "சகடாலனே! முன் இந்நகரத்தை இரவில் காப்பதற்கு நகரத்தலைவர்களை அரசன் நியமித்திருந்தான். ஒவ்வோரிரவும் அவர்களில் ஒவ்வொருவராகக் குறைந்துகொண்டு வந்தார்கள். அதன் காரணத்தை யறிவதற்கு அரசன் என்னையும் ஒரு நகரத்தலைவனாகச் செய்தான். (தொடரும்) பத்திராசிரியர்.

# சோழவரசர்கள்.

52-ம் பக்கத் தொடர்ச்சி.

## சமுத்திரசித்து.

இவன் இராச்சியத்தைத் தன் முன்னோராண்டதினும் விசாலமாக்கிக்கொண்டு அரசாண்டான். இவன் காலத்தில் கன்னியாகுமரிக்கு வடக்கே ஒரு*கால்வாய் கிழக்கு மேற்காக வெட்டி, அதனாலே கீழ்கடலையும் மேல்கடலையும் சம்பந்தப்படுத்தி அதன் வழியாகக் கப்பல்கள் போய்வரும்படி செய்து புகழ்பெற்றான். இவன் வசம் பலமரக்கலங்களிருந்தன. இவனது ஆட்சி வடகடல் வரையிற்பரவியிருந்தது. அப்பால்மைத்திரீபலன் என்பவன் தோன்றி அரசனானான்.

## மைத்திரீபலன்.†

ஈவிரக்கம் முதலிய நற்குணங்களெல்லாம் இவ்வரசனோடு பிறந்து வளர்ந்தன. இவன் கல்லாதநூலும் பயிலாத ஆயுதமும் இல்லை. மன்னுயிரனைத்தையுந்தன்னுயிரைப்போல வெண்ணிப் பாதுகாத்துவந்தமையால் இவ்வுலகிலுள்ளாரனைவரும் இவனிடத்துமிக்க அன்புபூண்டனர். ஏனையரசர்களும் இவனிட்ட கட்டளைப்படியே நடந்து வந்தனர். பூமிமுழுவதும் செழிப்புற்றது; யாவரும் கவலையும் தீச்செயலுமின்றி வாழ்ந்தனர்.

இங்ஙனம் மைத்திரீபலன் தனக்கென வாழாப்பிறர்க்குரியாளனாய்ச் செங்கோல் செலுத்திவருநாளிலே ஒருநாள் இயக்கர் ஐவர் இவன் நாட்டிற்கு வந்து சேர்ந்தனர். இயக்கர் யாவருமே பயங்கரமான ரூபமும் குரூரமான எண்ணமுஞ் செயலும் பூண்டவர்; அவர்களுள்ளும் இவ்வைவரும் மிகக்கொடியரென்று தம் அரசனாலே துரத்தப்பட்டு வந்துசேர்ந்தவர். இக்கொடியார் மைத்திரீபலனுடைய நாட்டில் யாருக்கேனும் தீங்கிழைக்கவேண்டுமென்றெண்ணிச் சுற்றித்திரிந்தும் அவர்களாலியலவில்லை.

அப்பால் இவ்வைவரும் வேதியருருவம்பூண்டு ஒருகாட்டின் வழியாகப் போய்க்கொண்டிருக்கையில் ஒருமரத்தின் நிழலில் கவலையற்று உட்கார்ந்து பாடிக்கொண்டே கயிறுதிரிக்கும் ஓரிடையனைக் கண்டு "இங்கு நீ பயமற்றுத்தனியாக விருக்கின்றனையே; இப்படியிருக்கலாமா?" என்று வினவினர். அதற்கு அவன் "ஐயன்மீர்! இவ்

*இதுவே பாம்பன் கால்வாய்போலும்.

† இம் மைத்திரீபலன் என்னும் சோழவரசன் சரிதம், வடமொழியில் ஆரிய சூரரால் செய்யுளும் உரை நடையுமாகக் கலந்து எழுதப்பெற்ற ஜாதமாலை என்னும் அருமையான பௌத்தநூலில், மிகவும் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. பண்டித ஐயரவர்கள் கருத்து முழுதும் அந்நூலின் கருத்தை ஒத்துள்ளது. (ப-ர்)

வுலகத்திற்குக் கண்கண்ட தெய்வமாகிய எங்கள் அரசனிருக்கும்போது எனக்குப்பயம் ஏது? இந்த இராச்சியத்தில் குடிகள் எங்கும் சஞ்சரிக்கலாம்; அவர்கள் யாருக்கும் பயப்படவேண்டியதில்லை" என்றனன். அதுகேட்ட இயக்கர் அவனைப்பார்த்து "நீ இங்கே மனிதருக்குப்பயப்படவேண்டியதில்லை; ஆயினும், கொடிய அரக்கர், இயக்கர் முதலியவர்கள்வரின் அவர்களுக்கும் அஞ்சவேண்டுவதில்லையோ?" என்று கேட்க, அவன் "ஆம் அஞ்சவேண்டியதில்லை" என்று சொல்லி அரசனை வாயாரப்புகழ்ந்தனன்.

இவற்றையெல்லாங்கேட்ட இயக்கர், அவ்வரசனைப் பரிசோதிக்க வெண்ணி அவனிடம்போய் "அரசனே! நீ வேண்டியவேண்டியாங்கு ஈயுமியல்புடையவனெனக்கேட்டு உன்னிடம் யாசிக்கவந்தோம். நாங்கள் இப்பொழுது மிகவும் பசித்திருக்கிறோம்,எங்களுக்கு நல்ல உணவுதந்தருளவேண்டும்" என்றனர். அது கேட்ட அரசன் "அப்படியேயாகட்டும், போய் உண்ணுங்கள்" என்று சொல்லிப் பரிசாரகரை யழைத்து "இவ்வைவருக்கும் நல்லுணவு கொடுங்கள்" எனக்கட்டளையிட்டான். அது கேட்ட இயக்கர் "வேந்தே! எங்களுக்கு அன்னம் வேண்டாம். நாங்கள் வேண்டும் உணவை நீ தடையில்லாமற் கொடுக்கக்கூடுமானாற் சொல்லுவோம்" என, அரசன் "ஐயன்மீர்! உங்களுக்குவேண்டிய உணவு எதுவாயினும் தருவேன், ஐயமின்றிக்கேளுங்கள்" என்றனன்.

உடனே இயக்கரைவரும் தங்கள் சொரூபத்தை யெடுத்துக்கொண்டு "அரசனே! நாங்கள் இயக்கர், எங்களுக்குணவு 'வெதுவெது'வென்ற சூட்டோடு கூடிய மனிதரத்தமும் மாமிசமுமேயாம். அவற்றைத் தரவல்லையாயிற்கொடு" என்று வேண்டிநின்றனர். பார்த்தான் அரசன்! அவனுக்கு இன்னது செய்வதென்று தோன்றவில்லை. அதனாற் சற்றுநேரம் திகைத்து, "நல்லது இதற்கேன்நாம் யோசிக்கவேண்டும்? இந்தச்சரீரமோ அநித்தியமானது,என்றைக்கேனும் இது மண்ணாவது திண்ணம். அங்ஙனம் வீணேகழிவதினும், இன்று இவர்களுக்குபயோகமாகும்படி செய்வது எவ்வளவு மேலானகாரியம்! அதனால் நமது வார்த்தை காப்பாற்றப்படுவதுமன்றி நமக்குப் புண்ணியமும் புகழும் உண்டாகும்.மேலும்கடவுள் நம்மைப் படைத்



தது இவ்வுலகத்தைப் பாதுகாப்பதற்காகத்தானே? அப்படியிருக்க நம்மிடம்வந்துயாசித்த இவ்வுயிர்களை நாம் பாதுகாவாமல் விடுவது உசிதமாகுமோ? இவர்கள் கொடியராயினும் நமக்கென். இவர்களுக்காக மற்றொரு மனிதனைக்கொல்வதும் அநீதியாம். ஆகவே கொழுத்த நம்முடையவுடலினின்றும் உதிரமாமிசங்களைக்கொடுத்து இவ்வைவரையும் திருப்திசெய்விப்பதே நமது கடமை" என்று இப்படித்தீர்மானித்து "உடனே நம் வைத்தியரை இங்கே அழை" என்று ஒரு சேவகனை யேவினான். அதுகேட்ட மந்திரிகள் கூடிப் பல நீதிகளைக்கூறித்தடுத்தும் அரசன் மனம் தடைப்படவில்லை.வைத்தியரும் வந்துசேர்ந்தனர். அரசன் அவரைக்கொண்டு தன் சரீரத்திலிருந்து ஐந்து இரத்தக்குழாய்களைத் துண்டித்து அவற்றின் நுனிகளை இயக்கரிடங்கொடுக்கும்படி செய்து இயக்கரைப்பார்த்து, "அதிதிகளே! உண்ணுங்கள்" என்று விருப்பத்துடன் வேண்ட,அவ்வைவரும் சிறிதும் இரக்கமின்றி, அக்குழாயின் வழியே பெருகிவரும் புதிய ரத்தத்தைக்குடிக்கத் தொடங்கினர். பக்கத்திலிருந்தவரனைவரும் அலறித் தங்கள் கண்களைப்பொத்திக்கொண்டனர். அந்நிலையிலும் சத்தவீரனாகிய அரசன் மனம் சலிக்கவில்லை.

இயக்கர் வேண்டியமட்டும் இரத்தத்தைக்குடித்து "அரசனே! போதும்" என்று நிறுத்தினர். உடனே அரசன் உடைவாளை யெடுத்துத் தன்னுடலிலுள்ள மாமிசத்தை அறுத்து (சிபியைப்போல) அவர்களுக்குக் கொடுக்கத் தொடங்கினான். அவ்வளவில் அக்கொடியார்மனமும் இரங்கிற்று. அவர்கள் அரசனைப்பார்த்து "வள்ளலே! உமது மகிமையையறியாமல் நாங்கள் இப் பாதகத்தைச் செய்துவிட்டோம். அதற்காக எங்களை மன்னிக்கவேண்டும். உமது கிருபாகடாட்சத்தினாலே எங்களுக்கு அறிவுண்டாயிற்று. இனிஇத்தகைய கொடுஞ்செயல்களை எவரிடத்துஞ் செய்யமாட்டோம். நாங்கள் ஐவரும் குடிக்கும்படி இரத்தத்தைக் கொடுத்ததினாலே உமக்கு இன்றுமுதல் 'பஞ்சபன்' என்னும் பெயர்வழங்கக்கடவது. உமக்கு மங்களமுண்டாகுக" என்று வாயாரவாழ்த்திச் சென்றனர். உடனே தேவர்கள் பூமாரிபொழிந்தனர். இந்திரன் ஓடிவந்து நல்ல மூலிகைகளைத் தருவித்துச் சாறுபிழிந்து அரசனுடலெங்கும் பூசி இரணத்தை

யாற்றினன். அன்றுமுதல் மைத்திரீபலனுக்குப் 'பஞ்சபன்' என்னும் பெயர் வழங்கலாயிற்று.

## வாதராசனைப் பணிகொண்டவன்.

மேற்கூறிய பஞ்சபனுக்குப் பின் பிரசித்தனாகிய இவ்வரசன் தன் வல்லமையினாலும் தெய்வ சகாயத்தினாலும் இப்பூமியையே யன்றித் தீவாந்தரங்களிலும் சிலவற்றைக் கைப்பற்றி ஆளத்தொடங்கினன். அதனால் இவன் கப்பற் சண்டையிலும் தேர்ந்தவனாய் விளங்கினன். இவன் ஒருசமயம் போர்செய்வதற்காக மரக்கலத்தைச் செலுத்திக்கொண்டு கடலிலே விரைந்து செல்கையில், காற்றில்லாமையாலே அம்மரக்கலம் ஓடாதாக, உடனே தன் வல்லமையாலே வாயுவையழைத்துத் தனக்கு அநுகூலமாக வீசும்படி செய்து கலத்தைச் செலுத்திப் போர்செய்து பகைவரை வென்று திரும்பினன். இவனுக்குப் பின் 'செம்பியன்' என்றொருவன் தோன்றினன்.

## செம்பியன்.

இவன் காவிரிப்பூம் பட்டினத்திலே அகத்திய முனிவரின் கட்டளைப்படி இந்திரவிழா நடத்தத்தொடங்கினன். அதனால் நாடு மிகவும் செழித்தது. மனிதரெல்லாரும் எல்லாவளமும் பெற்றுவாழ்ந்தனர். இங்ஙனமிருக்கையில் சுவர்க்கலோகத்திலே அசுரர்பயம் அதிகமாயிற்று. அவ்வசுரர் ஆகாயத்தில் இயங்கவல்ல மூன்று கோட்டைகளைச் செய்துகொண்டு தேவர்களை யெதிர்த்தனர். அதனால் தேவேந்திரன் இச்செம்பியனிடம் வந்து. தனக்குதவி செய்யும்படி வேண்டி இவனையழைத்துச் சென்றான். இவனும் ஆங்குச்சென்று தன்னிடத்திருந்த தெய்வத்தன்மை பொருந்தியதொரு வாளினாலே அக்கோட்டைகள் மூன்றையும் அழித்து அசுரரையடக்கித் திரும்பினன். அதுமுதல் இவன் 'தூங்கெயிலெறிந்த தொடித்தோட் செம்பியன்' எனச்சிறப்பித்துக் கூறப்பட்டான். *

## உபரிசரன்.

இவன் தனக்கு முன்னிருந்த அரசர்களைப் போலன்றி, இந்திரனிடமிருந்து எத்திசையும் செல்லவல்லதொரு விமானத்தைப்பெற்று அதிலேறிச் சென்று தேவருக்குதவியாய் நின்று அசுரரையழித்து 'உபரிசரன்' எனக்கீர்த்திபெற்று விளங்கினன். ஆகாயத்திற் செல்லவல்ல விமானத்தை முதன் முதற் பெற்றவன் இவனே. (தொடரும்)

அ. கோபாலையர்.

*சோழர்களுக்குள்ள பொதுப் பெயர்களில் 'செம்பியர்' என்பதும் ஒன்று. அது இவனுக்குப்பின் உண்டாயிற்றுப்போலும்.

# புகையிலை.

(67-ம் பக்கத் தொடர்ச்சி.)

பர்பியூரல்:—விஸ்கி என்னும் குடியில் பர்பியூரல் என்னும்நஞ்சு இருக்கிறது. இது சாதாரணமான குடியிலுள்ள நஞ்சைவிடப் பன்மடங்கு அதிகமானது. ஒரு சிகரெட்டைக் குடிப்பதில் உண்டாகிய நஞ்சானது இரண்டு அவுன்ஸ் நஞ்சுக்குச் சரியானதென்று சிகரெட்டு விலக்குச் சங்கத்தாரின் உதவித் தலைவரான மேல்நாட்டு நிபுணர் தெரிவித்திருக்கிறார். இது நாடி நரம்புத் தசைகளையும் மூளையிற்பொருந்திய தசைகளையும் கேடடையுமாறு செய்கிறது. இது நாடிகளைச் சிறுவயதிலேயே தளர்த்தி மனிதர்களின் புத்திக் கூர்மையைக் கெடுத்து நல்லொழுக்கத்திற்கு மாறாகச்செலுத்தி உடம்பு நடுக்கத்தில் கொண்டுவந்து விடுகிறது. சிகரெட்டுக்குடியில் பெருங்கெடுதிகள் உள என்பதைக் கவனித்துக்கொள்ள வேண்டியது. இதனால் சுவாசக்குழாயும் இரத்தாசயமும் நுரையீரலும் கெடுதியடைந்து காசரோகம் என்னும் இருமல்வியாதி உண்டாகி எளிதில் தீராத அசாத்திய நிலையைக்கொண்டுவந்து விட்டுவிடுகிறது.

அக்ரோலீன்:—சிகரெட்டைக் குடிக்கும்பொழுது அதன் சுற்றுக்காகிதமும் அளவாக எரிந்துகொண்டு வருகிறது. சுற்றுக்காகிதம் எரிவதினின்று அக்ரோலீன் என்னும் கொடிய நச்சுப்பொருள் வெளித்தோன்றி பெரும்புகையை உண்டாக்கி குடிப்பவர் மூளையித்தேறிப் போம்படி செய்கிறது. சிகரெட்டுப் பழக்கமுடையவனை நஞ்சொடு பழகி விரைவிற் கெடுபவனென் றறியவேண்டியது.

## புகையிலையைக் கையாடிவரும் விதங்கள்.

புகையிலையைக் கையாடி வரும் மாதிரிக்கேற்ப அதன்கெடுதியும் அத்துணை அளவாக விளைவிக்கப்படுகிறது.

(1) புகையிலையை வெற்றிலை பாக்குடன் இட்டு மென்றடக்குதல்.

(2) மூக்குத் தூளாக்கி சுவாசத்தினால் உள்ளே வாங்கித் தலைக்கு ஏற்றிக்கொள்ளல்.

(3) புகையிலைத்தூளை தலைப்பொடுகு பேன் முதலியவைகளைக்குத்தலைக்கு உபயோகித்தல்.

(4) மூக்குத்தூளை வாயிதழ்களில் திணித்துக் கொள்ளுதல்.
(5) சுருட்டுப்பிடித்தல்.
(6) சிகரெட்டுக் குடித்தல்.
(7) சுங்கானிலும் சிலும்பியிலும் குடாக்கிலும் வைத்து புகை குடித்தல்—என்ற விதங்களில் கையாளப்பட்டு வருகிறது.

மேற்கூறிய விதங்களில் வெற்றிலை பாக்குடன் இட்டு மென்றடக்கிக்கொள்கின்ற முதலாவது விதத்தை முதலாவதாக எடுத்துக் காட்டவேண்டியது அவசியமாயிருக்கிறது. ஏனென்றால், நமது நாட்டின் தற்போதைய மனிதவாழ்வு புகையிலையின் பயனைத் தழுவியே அதனைப் பெருந்துணையாக விடாமல் பற்றிக்கொண்டு செல்லுதலினாலேயாம்.

## புகையிலையின் வகையும் அதனைக்கைக்கொண்ட நாடுகளும்.

நமது இந்தியாவில் உலர்ந்த புகையிலையை வெற்றிலை பாக்குடன் சேர்த்து வாயில் அடைக்கிக்கொள்ளுவதில் சில பிரதேசங்கள் முன்னேறிக்கொண்டு வருகின்றன. அவற்றுள் வடபகுதியில் ஒரிஸாநாடு தலைமை பெற்றிருக்கிறது. வாங்காள நாட்டினுள்ள தனவந்தர்களில் பெரும்பாலர் சூர்த்தி, ஜர்தா என்ற வாசனைப் புகையிலையில் மிக்க அவாவுடையவர்களாய் விளங்குகிறார்கள். வட இந்தியாவில் விலையாக்கப்படும் புகையிலையில் பெரும்பகுதி வங்காளத்தில் செலவழிந்துவிடுகிறது. தென்பகுதியிலுள்ள தமிழ்நாடும் கேரளநாடும் புகையில்லையைக்கையாடும் மாதிரியைச்சற்றுக் கவனித்தால் வடபகுதி அவ்வளவு மேலேறிவிடவில்லையென்று தெரிகிறது. கேரளநாட்டினராகிய மலையாளிகள் பச்சைப்பாக்கில்ஒருதுண்டும்அந்நாட்டுவெற்றிலையில் கால் அல்லது அரைவெற்றிலையும் வாயிலிட்டுக்கொண்டு காரமுள்ள உயர்ந்த புகையிலைத் துண்டொன்றையும்உடன் சேர்த்து நன்று அடக்கிக் கொள்ளுகின்றனர்.

அவர்கள் காரமமைந்த புகையிலையைத் தெய்வமாக மதித்து வடக்கன் புகையிலை, கிழக்கன் புகையிலை, ஆகியவற்றை மற்றப் புகையிலையைவிட மிக்க உயர்வாய் ஆதரித்து வருகிறார்கள். அவர்கள் பச்சைப்பாக்கை உபயோகத்தில் வைத்திருப்பதைப் பார்த்துத் தமிழ் நாட்டினரும் அங்ஙனமே கையாளும் போது பித்தத்தையும்



அப்பச்சைப்பாக்கு உண்டுபண்ணிவிடுகிறது. அன்றியும் உடம்பினுள்ள சூட்டை வெப்பமான ஆவியாய்க் கிளப்பிச் செவித்துளையில் வெப்பத்தைக்காட்டி உடம்பெங்கும் வியர்த்துப் போம்படி செய்துவிடுகிறது. மலையாளிகள் தேங்காயெண்ணெய் உபயோகித்து வருவதாலும் ஏற்ற பூசாரத்திலிருந்துவருவதாலும், பச்சைப்பாக்காலுண்டாகும் கெடுதிமாற்றப்படுகிறது. முற்பட்ட ஆண்டுகளில் தமிழ் நாட்டார் புகையிலையை இரண்டு வகையாகப் பிரித்து அனுபவித்து வந்தார்கள், அவற்றுள் ஒன்று கருப்பட்டிப் புகையிலை. மற்றொன்று உலர்ந்தபுகையிலை. கருப்பட்டிப் புகையிலை உலர்ந்த புகையிலையை விடத்தீமைசெய்வதில் குறைந்த தன்மையையுடையது. ஏனெனில் பனைவெல்லம் குளிர்ந்த தன்மையும் பித்தத்தை அழிக்குந் தன்மையோடு உடம்பினை வளர்க்கும் தன்மையும் கொண்டிருப்பதாலென்று அறியப்படுகிறது. தற்போது கருப்பட்டிப் புகையிலை அருகிப் போம்படி சில ஆண்டுகளாக வெளியேறிவந்துள்ள வாசனைப் புகையிலை செய்து விட்டது. வாசனைப் புகையிலை வந்த பின்புதான் நகரத்திலுள்ள தமிழ் மக்கள் பெரும்பாலர் தங்கள் பழய இயற்கை வாசனையை மறந்து வாசனைப் புகையிலையை மெதுவாகப் பின்பற்றச் சிறிது முயற்சி எடுத்துக்கொள்ள முன் வந்தார்கள். புதியவாசனை ஏறிக்கொள்ளுங் காலமானதால் வாசனைப் புகையிலை நகரங்களில் எங்குபார்த்தாலும் தலை தூக்கத்தொடங்கிவிட்டது. வெற்றிலைக் கடைகளோ தெருசந்துபொந்து மூலை முக்குநகர்ப்புறத்துள்ள ஒய்ந்த இடங்களிலெல்லாம் எங்குபார்த்தாலும் தாராளமாக நிறுவப்பெற்று வாசனைப்புகையிலையைத் தலைமையாகக்கொண்டு விளங்கத் தொடங்கின.

புகையிலை உபயோகத்தைக் கைக்கொண்டு வளர்த்து வருபவர்களை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக மாறிவரலானார்கள். புகையிலையை உற்சாகத்திற்கும் உல்லாசத்திற்கும் ஓர் அரிய மூலிகையென்று பாராட்டலானார்கள்.

புகையிலை போடுபவர்களின் தமாஷாக்களை ஆராயாது மதித்த மற்றவர்களும் அவர்கள் மாதிரியைப் பின்பற்றிப் பெரும்பாலும் புகையிலைத் தோழர்களாகவே நகரெங்கும் மலிந்து வருகிறார்கள்.

இரண்டொரு வருடத்திற்குள் வாசனைப் புகையிலையைக்கொஞ்சங்கொஞ்சமாகக் கைநெகிழவிட்டு அதற்கீடாக உலர்ந்த புகையிலையிற் சிறந்ததென சில விடங்களில் விளைந்துவரும் புகையிலையினருமையைப் பாராட்டினார்கள். அதற்குக் காரணம் வாசனைப்புகையிலையில் கெடுதியிருக்கிறதென்றும் பல் எயிற்றைத் தின்றுவிடுகிறதென்றும் அதில் சேர்த்திருக்கும் உபரிச் சரக்குகள் பல்லினையுங் கெடுத்துவிடுகிறதென்றும் வாய்ப்புண்ணும் வேக்காடும் உண்டுபண்ணி விடுவதோடு குழம்பு முதலிய காரங்களைச் சோற்றோடு சேர்த்துச்சாப்பிடக் கூட முடியவில்லை என்றும் கூறினார்கள்.

கடைசியாய் வாசனைப் புகையிலையான ஆரம்பப்படிப்பில் தேறிக் கலப்பில்லாது உலர்ந்த தனிமையான சிவபுரிப் புகையிலை, அலையாங்குளம் புகையிலை, வேதாரணியம் புகையிலை, பூங்குடிப்புகையிலை, ஆவியூர்ப்புகையிலை, யாழ்ப்பாணம்புகையிலை, வடக்கன்புகையிலை, கிறுக்கன்புகையிலை ஆகிய எல்லாப்புகையிலைகளிலும் தேறித்தெளிந்த அனுபவமுடையவர்களாய் ஆகிவிட்டார்கள். அதன் பின் வெற்றிலையோடு எந்தப்புகையிலையைச்சிறந்ததாகத் தீர்மானித்துப் போட்டாலும் அதிகநேரம் வாயில் வைத்திருக்க முடியாது உமிழ்ந்து விட்டு எல்லாப்புகையிலைகளும் உற்சாக மில்லாது போனமைக்காகச் சலிப்படையலானார்கள். அத்தருணத்தில் புகையிலை அனுபவியான சிறந்த நிபுணர் ஒருவர், புகையிலையில் முடிவுகண்டு சலித்துப்போனவர்க்கென்று ஒரு அரும்பொருளைக்கண்டுபிடித்துக் கொடுத்தார் அதனை வெற்றிலையோடு போட்டு இருகவுளிலும நெடுநேர மடக்கி வைத்துப் பார்த்துப் புகழ்ந்துபாராட்டிப்பெருவகை கொள்ளலானார்கள். அந்த அரும்பொருளைத் திடீரென உடனே சொல்லிவிடுவதிற் பெருமையில்லையென்றே சற்று நிறுத்திவைத்தேன். எதுவும் ஒரு காலத்தில் வெளியாய்விடக்கூடுமானதால் அதனைச்சொல்லிவிடுகிறேன். அதுதான் ஒவ்வொரு புகையிலையிலும இருபக்கத்திலைகளைத் தாங்கிக்கொண்டிருக்கும் நடுநரம்பின அடிக்கட்டை அல்லது அடிக்காம்பு அல்லது புகையிலைக்குச்சியாம். (தொடரும்)

ம. சுந்தரபாண்டிய ஓதுவார்.

# மனம்.

சாதாரணமாக மனமானது சிற்றின்பங்களிலேயே செல்ல எத்தனிக்கிறது. வெகுவாகப் பிரயோஜனம் இல்லாத காரியங்களிலே சம்பந்தப்பட்டு வருந்துகிறது. மனத்தினுடைய இயற்கையான குணம் நல்ல பரிசுத்தம். சேர்க்கையினாலும் சிலவேளைகளில் பூர்வகர்மத்தின் குறைவாலும் அது கெட்டுப்போய் அழுக்கு அடைந்துவிடுகிறது. நல்லவர்களுடன் கலந்து இருக்கஇருக்க கொஞ்சம் கொஞ்சமாக அழுக்குநீங்கி முன்போல பரிசுத்தத்தை அடையும். மனத்தை ஒரு சுத்தமான கண்ணாடிக்குச் சமானமாக உதாரணம் சொல்லுவது வழக்கம். சுத்தமான மனமுள்ளவர்களை நாம் பார்ப்போமானால் அங்கே யாதொன்றும் தென்படாது. நம்முடைய மனத்தினுடைய நிழலே அதில் காணும். அப்போது நாம் அடைந்துள்ள சுகத்தையோ! துக்கத்தையோ! அதில் பிரதிபிம்பிக்கப் பார்க்கலாம். அசுத்தமான மனத்தையுடைய ஒருவன் மற்றொரு அசுத்தமான மனசுக்காரனைப்பார்த்தால் அசுத்தமானது இருவருடைய மனத்திலேயும் அதிகப்படும். ஒருவரை ஒருவர் சந்தித்ததின் பலனாக இன்னும் நிரம்ப கெட்டவர்களாக ஆகிறார்கள். ஆனால் ஒரு கெட்டமனசுக்காரனை ஒரு நல்ல மனசுக்காரன் வேண்டுமானால் கொஞ்சப் கஷ்டப்பட்டு அந்த அசுத்தத்தைநீக்கி மறுபடியும் முன்போலப் பரிசுத்தப் படுத்திக் கொடுக்கமுடியும். அழுக்கினுடைய குணத்திற்குத் தக்கபடி பிரயாசையும் காலதாமதமும் வேண்டும். உலகத்தில் மிகவும் ஆச்சரியமாகத் தோன்றக்கூடிய விஷயங்களில் மனக்கவற்சி அல்லது வசியம் என்பது ஒன்று. ஒன்று மற்றொன்றை வெற்றிகொண்டு தனதாக்கிக் கொள்ளும். இப்படி வெற்றிகொள்ள வேணுமானால் நல்ல ஒழுக்கம், சாந்தம், அன்பு, பக்திமுதலிய தெய்வகுணங்கள் நிறைந்து இருக்க வேணும். அதுவே பரிசுத்த மனத்தின் இலக்ஷணம். பரிசுத்த மனம் உடையவர்களே, தெய்வபக்தி யுள்ளவர்கள், அவதார புருஷர்கள், ஆண்சிங்கங்கள், மஹாஉத்தமர்கள், கடவுளது கட்டளைப்படி உலக விஷயங்களை நடத்துபவர்கள். இப்பேர்ப்பட்டவர்கள் லக்ஷம் சாமானிய ஜனங்களில் ஒரு அவதார புருஷர். இவர்களுடைய வாக்கு தெய்வ வாக்கு. சொன்ன சொல்படி பலிக்கும்.

ஒரு பொருளிடத்தில் நாம் கொள்ளுகிற ஆசைக்குத் தகுந்தபடி சந்தோஷமும் அது கிடைக்காத விஷயத்தில் துக்கமும் அடைகிறோம். சாஸ்வதம் இல்லாத பொருள்களிடத்து நாம் ஆசைவைப்பது அஞ்ஞானம். அதற்காகச் சந்தோஷப்படுவதும் துக்கப்படுவதும் அஞ்ஞானந்தான். சாதாரணமாக எல்லா மனிதர்களும் இந்தப்படி சீக்கிரத்தில் அழிந்து போகக்கூடிய பொருள்இடத்து ஆசைகொண்டு சிறு குழந்தைகளைப்போல சற்றுநேரம் சந்தோஷம் அடைந்தோ அல்லது துக்கத்தை அடைந்தோ பிறகு நாம் அப்படி சந்தோஷப்பட்டதோ அல்லது துக்கப்பட்டதோ மிக்க பிசகான காரியம் என்று நமக்குள் நாமே நினைந்து வெட்கப்படுகிறோம். நாம் நல்ல விஷயங்களில் ஆசைகொண்டால் அதனால் எப்பவும் சந்தோஷம் ஏற்படுமேயொழிய துக்கம் ஏற்படமாட்டாது. அதைப்பற்றி எந்தநேரம் நினைத்தபோதிலும் ஒரே நிதானமாகவே சந்தோஷத்தைக் கொடுக்கும். மனம் விலாசத்தையும் தைரியத்தையும் அடையும். இதுவே நல்லவர்களுடைய மனநிலை. அதை நாம் அடைய முயற்சிக்கவேண்டும்.

ஆனால் பெரியோர்கள் நற்கதியைமட்டும் விரும்பி மற்றயாவற்றையும் விரும்பாது நல்வழியில் நடந்து ஆசையை ஒழித்துச் சுகதுக்கங்கள் தங்களைப் பாதிக்காமல் சுயம்பிரகாசமாக விளங்குவார்கள். ஆசையை ஒழித்துவிட்டால் துக்கமும் இல்லை. தெய்வபக்தியின் ஆனந்தத்தில் மூழ்கி இருப்பவர்களுக்கு மேலான வஸ்துக்கள்கூட நிரம்ப அலக்ஷியமாகத் தோற்றும். ஆசையில்லையானால் சலனம் இல்லை. மனம் எப்போதும் பரிசுத்தமாகவே இருக்கும்.

உலகசம்பத்துக்கள் சுகபோகங்கள் இடத்து ஆசைகொள்ளாமல் மனதைத் திடப்படுத்தி வைத்துக்கொள்ளுவது என்பது சாமான்னியமான காரியம் அல்ல. எவ்வளவோ மஹான்கள் இப்படி முயற்சித்துத்தவறிக் கெட்டுப்போனவர்கள் கோடானகோடி. வெற்றிகொண்டவர்கள் மிகக்கொஞ்சப்பேர்கள். மனத்தை அற்ப விஷயங்களில் செல்லவிடாது பக்திமுதலிய நல்ல வழிகளில் செலுத்துவதே பிறவாமை முதலிய நல்லகதி அடையும் உபாயம். ஆத்மசக்தி என்பது எல்லாரிடத்திலும் உண்டு. அற்பவிஷயங்களிலே செல்லவிடாது உத்



தம காரியங்களில் பிரயோசனப்படுத்தினால் நல்லகதி கிடைக்கும். மோட்சவீடு முதலியவை கிடைக்கும். ஆத்மசக்தியினால் ஆகாதது ஒன்றும் இல்லை.

அற்பவிஷயங்களை அடைந்து அனுபவிப்பதற்கும் அறிவு ஒழுக்கம் முதலிய உத்தம குணங்களைச் செலவிடவேண்டி இருக்கிறது. இவ்வளவு பிரயாசைப்பட்டும் கொஞ்சநேரத்திற்கெல்லாம் இருந்த இடம் தெரியாமல் எல்லாம் மறைந்து போய்விடுகிறது. அப்படிச் செய்யாமல் நல்ல உத்தமமான விஷயங்களில் இப்பேர்ப்பட்ட உத்தமமான குணங்களைச் செலவுசெய்தால் விசேஷலாபமும் ஜன்மசாபல்யமுதலிய சாம்ராஜ்யங்களும் கிடைக்கும். இதுவே பெரியோர்களுடையவும் தெய்வத்தினுடையவும் திருவுளச்சம்மதம். மிருகங்கள் முதலிய கீழ்ப்பிராணிகளைப்போலவே அற்பசுகியும் பிறந்து இறக்கிறான். உயர்வாக வாழ்வதும் போகங்களை அனுபவிப்பதும் கடைசியில் இறப்பதுவும் அப்படியே உலகத்தில் பிறப்பதேன்? ஜன்மாவின் அவசியம் ஏன்; பிறகு மோட்சம் அடைவது எப்படி என்ற பலவிதமான முக்கியமானதும் பொறுப்பானதுமான கவலையை மிருகங்கள் எப்படி அடைகிறது இல்லையோ அப்படி விசேஷ அறிவு அடைந்தும் இவனும் அடைகிறதுஇல்லை. இப்பேர்ப்பட்ட பாக்கியங்களை அடைவதற்கு மனமானது சிலாக்யமான பக்குவத்தை அடையவேணும். அது நாளடைவில கொஞ்சம்கொஞ்சமாகப் பெரியோர்களுடைய ஆதரவிலும் பூர்வபுண்ய பாக்கியத்தினாலும் கிடைக்கும். சாதாரணமாகத் தனக்கு வேறாக வெளியே தோன்றும் விஷயங்களில் மனம் ஆசைகொண்டு சந்தோஷத்தை அடைகிறது. பிறகு அழியும் தன்மையைக்கண்டு வெளித்தோற்றத்தில் சந்தோஷம் கொள்ளாது தன்னையேநாடி உள்நோக்கி சிந்தித்து இயற்கையாகவே உள்ள ஆனந்தத்தைத் தனக்குள்ளே இருப்பதைக்கண்டு அதில்மூழ்கி நல்லகதியை அந்தமனம் அடையும். மிருககுணங்களைவிட்டுத் தெய்வத்தன்மையைக் கடைசியாக அடையும்.

(இன்னும் வரும்.)

ராமாராவ், வக்கீல்,
மதுரை.

# சம்பகமாலினி.

(113-ம்பக்கத்தொடர்ச்சி.)

உங்களிராஜ்ஜியத்திலுள்ள எவ்விதப் பராக்கிரமசாலிகளுடனும் மல்யுத்தஞ் செய்யத் தயாராக விருக்கின்றேன். அந்த யுத்தத்தில் என்னை ஜெயிப்பதற்கு ஒருவராலுமாகாதென்று நான் நன்றாயறிந்திருந்தும் வழக்கம்போல் இந்நாட்டு மல்லர்களையும் வீரர்களையும் போருக்கிழுத்துத் தோற்கடித்து வீரக்கொடியெடுத்தேக சபதம் செய்திருக்கிறேன். மகாராஜா! உங்கள் தேசத்தில் என்னுடன் போர்புரியும் வீரர்கள் எவரேனுமிருப்பின் அவர்களை யனுப்புங்கள்.

எல்லோரும் சும்மாவிருக்கிறார்கள்.

யாருமில்லையா?

சாரு—வீரர்களே! சுவர்க்கோழிபோல் கொக்களிக்கும் இம்மல்லனின் இறுமாப்பையடக்க உங்களில் ஒருவருமில்லையா? நான்மாத்திரம் இததள்ளாடும் கிழத்தன்மையை யடையாவிடில் இவனை இக்கணமே எமனுலகிற்கனுப்புவேன். நான் என்செய்வது? இவ்வித அவமானத்திற்குள்ளாக நீங்கள் ஏன் சும்மா விருக்கின்றீர்கள்.

பட்டபாண—சல்லியராஜனே! ஏன் தாமதிக்கின்றீர்கள்? புஜபல பராக்கிரமமிருந்தும் ஏன் தயங்குகின்றீர்கள்? இவ்வரசின் பெருமையைக் காப்பாற்றுங்கள்.

சண்ட—ஆஹா! அப்பொழுதே நினைத்தேன். என்னெதிரில் நின்று யுத்தம்புரியும் மானிடனும்உளனோ! அரசே கொடுங்கள் எனக்கு வெற்றிலையும் வெற்றுக்கொடியும்.

சாளி—மல்லா! பொறு. வீணாகவேன் அகங்காரங்கொள்ளுகின்றாய்? ரணவீரரே! மகாயுத்தங்களிற் சென்று வெற்றிபெற்றுவரும் சேனாதிபதி நீரேனும் இச்சமயத்தில் உம்முடைய பிரதாபத்தைக் காண்பிக்கவேண்டும். யுத்தரங்கத்தில் சலியாதுநின்று போர்புரியும் உமக்கு இவன் எம்மாத்திரம்?

சண்ட—ரணவீர சேனைத்தலைவரே! வாரும் யுத்தம்செய்வோம். ஆனால் கடைசியில் எமனுலகிற்கு நீர் பிரயாணம் செய்யவேண்டுவதை நினைத்து எல்லோரிடமும் விடைபெற்று வாரும்.



சாரு—ஆம் இந்த அவமானத்தை நான் எவ்வாறு பொறுப்பது? என் செய்யலாம்? சுமந்திரரே! நமது ராஜ்ஜியத்தில் சுத்தவீரர்களே இல்லை யென்றவசைச்சொல் இனி என்றும் மாறாது. அம்மல்லனுக்கு வேண்டியமரியாதைகளைச் செய்தனுப்பும்.

ஜெயசிம்மன் அரசன்முன் வணங்குகின்றான்.

ஜெய—அரசே! மந்திரிக்கிட்ட உத்தரவை மாற்றும்படி மிகவும் தாழ்மையுடன் வேண்டிக்கொள்ளுகின்றேன். இந்த மல்லனுடன் போர்புரிய நான் தயாராக விருக்கின்றேன்.

சாரு—ஆஹா! உன் வீரத்தை நான் ரெம்பவும் மெச்சினேன். ஆயினும் உன்னைப்பார்த்தால் இளவயதுள்ளவனாகக் காணப்படுகின்றாய். அவனது உடம்பின் காத்திரத்திற்கும் உனக்கும் அதிகவித்தியாச மிருக்கின்றது. ஏன் வீணாக உன் உயிரைப் போக்கிக்கொள்ளுகின்றாய்? வேண்டாம். நான் கூறுவதைக் கேள். என்னைப் பற்றி நீ உயிரைவிடத் துணிந்ததற்கு நான் மிக்க சந்தோஷமடைந்தேன். யுத்தம் புரிந்தால் நீ இறப்பது திண்ணம். வீணாக உயிர் துறக்க வேண்டாம்.

சண்ட—குலைக்கும் நாய்கடிக்காது என்ற பழமொழியை அவனறியவில்லை போலும்.

ஜெய—சீ! சீ! நாயினுங் கடையோனே! உன்னகங்காரத்தைப் போக்குவிக்கின்றேன் பார்.

சண்ட—பேஷ்! அச்சா! கடலினலைகள் வெகு ஆரவாரத்துடன்றான் வரும். மலையில் அவைகள் மோதினால் துளி துளியாகப் போகின்றன. அவ்வாறே உன்னுடலினெலும்புகளும் நொருங்கிப் பொடியாகும்படி செய்வேன்.

ஜெய—அரசனே! உத்தரவு கொடுங்கள்.

சாரு—வேண்டாம்! வேண்டாம்! வீணாக என்பொருட்டு உயிரிழக்கவேண்டாம்.

சண்ட—தீயில் விழும் விட்டில்போல் துள்ளும் இப்பூச்சியை யாரால் தடுக்கக்கூடும்.

ஜெய—இவ்விதம் பேசும் உனதுவாயை மூடுகின்றேன். சற்று பொறு—ராஜனே! எனதுயிர் எனக்குத் திரணமாத்திரம். நான் இருந்தாலும் இறந்தாலும் ஒன்றுதான். என்னைக் குறித்துச் சந்தோஷங் கொள்ளவாவது வருந்தவாவது இப்பூவுலகில் ஒருவருமில்லை. மற்றும் என்னையே இவன் அவதூறுபேசுகின்றான். ஆகையால் இனி என்னால் சகிக்க முடியாது. இந்தயுத்தத்தில் மடிந்தால் வீரசுவர்க்கம் அடைவேன். ஆனால் அப்பொழுது எனக்கு ஒருபகாரஞ் செய்ய வேண்டும். அதாவது, அரசனின் காதில் ஓர் அனாதைப் பெண் என் வீட்டில் வசிக்கின்றாள். அவளை நீங்கள் காப்பாற்ற வேண்டும். அதற்கு நீங்க ளிசைந்தால் யாதொரு மனக்குறையின்றி என்னுயிரை விடுவேன்.

சாரு—வீரனே! அப்படியே யாகட்டும். இருப்பினும் உனது சௌகரியத்தை நான் என்றும் மறவேன்.

ஜெய—இனி எனக்கு ஓர் கவலையுமில்லை. அடே மல்லா! உன் வீரத்தை இனிக் காண்பிக்கலாம், உன்னை மண்ணோடு மண்ணாக்குகின்றேன். உன்கொடிகளையும் மாலைகளையும் பாழாகச் செய்கின்றேன்.

இருவரும் யுத்தஞ் செய்கின்றார்கள். (தொடரும்)

K. இராமதாதையர்,
வக்கீல், சாத்தூர்.

---

## விடுகதை வினாவிற்கு விடை.

வெண்பா.

இமிழ்திரைசூழ் குவ்விலய ரேற்றமிகு கம்பன்
அமிழ்தினேர் செஞ்சொ லழகார்—தமிழராசே
மாசுகக்கொண் மாணவனால் வந்தவினா விற்குவிடை
ஆசுகமென் றேநீ யறை.

அக்கரங்கள் 4. 1 2 3 4
ஆ சு க ம் வாளி=அம்பு.

தக்கமுதற்பாதியின்றேல்—கம்=முகில்
பிற்பாதி யறச்சாரும் குற்றம்—ஆசு=குற்றம்



முதலெழுத் தெடுத்தாற் றத்தை—சுகம்=கிளி
முதல் எழுத்து—ஆமோவாம்=பசு.

ஆறுமுகம் கூடல்.

குறிப்பு:—இவ்விடையை ஒட்டியே மதுரை D. A. வெங்கடராவும் பெரியகுளம், குகாம்பிகா தாசனும் M. S. மணிஐயரவர்களும், காலேஜ் மாணவன் இராமச்சந்திரனும், விருதுபட்டி "குலீநர்" என்பாரும் கடித மூலமாக எழுதியனுப்பி யிருக்கிறார்கள்.

---

## சூர்யோதயம்.

சீர்பெறுமின்பச் சிறந்திகழப்
பார்பெறுமதிகப் பயனையளிக்குங்
குணகடல்மங்கை கொங்கைமீதானை
குணமுறக்கொண்டு கூடிப்பிரிந்து
வடலும்நீங்கி யுவகையும்பூக்கத்
தொடைவிழ்நறும்பூஞ் சோலைகள்பலவுஞ்
சேற்றிகழ்கயமுஞ் சிறப்புடனுற்ற
பேற்றிசைமகளை மேவிச்சுகித்து
செவ்வரிக்கண்கள் சிவந்ததேயன்ன
ஒவ்வுந்தீஞ்சுட ரோங்கப்பரப்பி
நசைபெற்றிலக நானிலமீது
திசையெட்டுள்ளுந் தீயகங்குல்
நீங்கும்படியாய் நேசத்துடனே
பாங்குடனுதித்த பண்பார்தினகரன்!
மாவியையாது மருடனைப்போக்கும்
பாவிபகிரணப் பானுப்பெயரோன்!
கோதறுமிரவி! சுருதித்தன்!
ஆதவனென்னு மபிதானத்தோன்!
கருதும்பெரிய கதிரின்கடவுள்!
கருதிபோற்றுஞ் சூரியநாமன்!

புலவர்கணெஞ்சும் பூவையர்கண்களும்
தலமதில்முன்செய் தவமதையொக்க
நூலுட்படர்ந்த நுண்ணியபொருளைச்
சாலுறக்கொள்ளச் சங்கடமின்றி
யெங்குஞ்சென்று பின்னோரன்ன
பக்கமிலைதெப் பதியினுஞ்சென்றும்,
பொற்புறுமின்ப வற்புறுசிந்தைக்
கற்புறுமாதர் காமப்பெருக்காற்
கலவியிற்றங்கள் கணவரைக்கூடிக்
குலவிக்குலவிக் குவளையைவென்ற
சேலோதிகழ்வடி வேலோகடலுதி
யாலோவென்று மாட்சிச்சிவப்பென
அம்புயமாதி னாசைப்பெருக்காற்
றம்புயமுறவே தழுவுகாரணத்தாற்
சிவந்ததோவிவனிரு திருவிழிகளுமெனக்
கவிந்திடுமையங் கண்டேயன்னோன்
"அன்று, அன்று, அதுதானன்று!
'பொன்றிகழ்மேனிப் புருடன்மறைய
மாற்றானுமம் மதிவந்துதிக்க
ஆற்றுளாகி அனலெனுங்கற்புக்
கவிந்ததாலே கண்களைமூடிக்
குவிந்தே'னென்னக் குறையிடுகின்ற
கஞ்சமென்னுங் காதற்கிழத்தி
வெஞ்சாம்ரீக்க வெகுளிமேற்கொண்டு
செஞ்சுடர்ச்சேனை திறனுடன்றிரட்டி
வஞ்சகனுமம் மதியெனுங்கொடிய
திங்களென்னுந் திருநாமத்தோன்
அங்கமாகி யவன்றுணையான
இரவோடிதுவரை யென்றிரங்காட்டிச்
செருமிகந்தானே செய்ததினாலே
"செந்நிறமானே னென்பான்"போல
நன்னியமாயின் னுணிலமீதில்



தோன்றியேவந்த சுத்தவீரன்!
ஆன்றோர்புகழும் அரும்பெரும்பரிதி!
காண்டகுசீர்த்திக் கலைகாணுத
மாண்டகுசெல்வ மாசிற்பாற்கரன்!
கொக்கரவென்று கோழிகள்கூவச்
செக்கர்வானஞ் சிறப்புடன்மேவ
நித்திரைநீத்து நீண்மாநிலத்தோர்
சித்தந்தெளிந்து தியானத்துடனே
அக்காணுறலை யறவேயொழித்துத்
தக்கோர்பணியிற் சார்ந்திடாமுன்னம்
காலைப்போழ்தின் கடன்களைமுடித்தலும்,
சீலத்துற்ற சீரியரான
பந்தமகற்றும் பண்புடையோரா
யந்தணரிற்பல ரங்கைகுவித்தலும்,
உழுதுண்டுவாழ்பவர்க் கொப்பிலையென்னும்
பழமொழிதன்னைப் புதுமொழியாக்கும்
காராளக்குலக் கனைதயைப்பெற்றோர்
ஏராளமாய்த்தம் மில்லத்திருந்து
ஏர்த்தடிதோளி லேற்றுநின்று
பார்த்தடிவைத்துப் பாபாப்பாயோர்
காத்தினிற்கஞ்சிக் கலயமற்றொன்றிற்
றாத்தினிலுயர்ந்த தார்க்கோலினையும்
ஏந்திச்செல்ல இவர்தம்மனத்தைச்
சாந்தப்படுத்தும் தன்மைத்தேபோல்
வழிநடைச்சிந்து மாக்குயிலினங்கள்
எழிலுறப்பாட இருஞ்சிறகுடைய
சுரும்பினமதுவுஞ் சுருதியுங்கூட்ட
விரும்பியேயங்கு மேவுதடாகத்
தவளையினங்கள் ஜாலராப்போட
சுவைபெறுவதனைச் சோபிக்கச்செய்
மண்டூகங்கள் மத்தளத்திகழ்ப்ப—

கொண்டைமயிலுங் கூத்தாடிக்க
(85) வந்தான்வந்தான் வாழ்த்திப்பணிந்து
கந்தாவளம்பல நல்கவாழ்த்துதுமே.

"மாணவன்"

---

# ஸத்குருமஹிமை.

(118-ம் பக்கத்தொடர்ச்சி.)

---

அவ்விதம் ஒப்புக்கொண்டு, மிகவும்மெலிந்த நானூறு கோக்களை அவனிடம் கொடுத்து, ஆயிரம் கோக்களாய் விருத்தியாகும்வரை திரும்பி என்னிடம் வரக்கூடாது என்றுசொல்லி அனுப்பினார். அவனும் அவ்விதமே வனத்தில் அவைகளைக் கொண்டுபோய், வெகு வருடங்களாய் ஸம்ரக்ஷித்து வரும்போது, அவை ஆயிரமாயின. அப்போது அவனிடம் வாயுதேவதை சந்தோஷித்து, விருஷபத்தில் பிரவேசித்து சோடசகலைகளில் நான்கு கலைகளுள்ள ஒருபாதத்தை அவனுக்கு உபதேசித்தார். அவ்விதமே, தேயு, சூரியன், பிராணன் ஆகிய தேவர்களும் ஒவ்வொரு பாதத்தையும் முறையாகவே உபதேசித்தார்கள். இவ்விதம் அத்தேவர்களிடம் உபதேசம்பெற்று, அவர்களின் அநுமதியுமடைந்து தனது குருகுலம் சென்றான். அப்போது கௌதமர் "அந்தேவாஸியே! நீ பிர்மஞானிபோல் பிரகாசிக்கிறாய். உனக்குயாவர் இந்த வித்தையை யுபதேசித்தனர்" எனவே, ஸத்யகாமன, "தேசிகோத்தமரே! மனிதர்களைக் காட்டிலும் புறம்பான தேவர்கள் உபதேசித்தனர். அவர்களின் உபதேசத்தை யான்பொருட்டாகப்பாவிக்கவில்லை. தாங்களே உபதேசித்தருளவேண்டும். ஸத்குருவினிடமிருந்து பெற்ற வித்தைதான் பயன்படும் என்று ஆன்றோரிடத்திலிருந்து கேள்விப்பட்டுள்ளோன்" என்று வேண்டினான். அப்போது கௌதமர் அதையே உபதேசித்தார். பதினாறுகலையுள்ள அவ்வித்தை கொஞ்சமேனும் வழுவாமல் அதேமாதிரியாகவே இருந்தது. ஆயினும் "ஸத்குருவின் முகமாகவே அதைத் தெரிந்துகொள்ளவேண்டும். அதுதான் ஸித்திக்கும்" என்று சுருதிகள் கூறுகின்றன.



நான்கு சமுத்திரங்களால் சூழப்பட்டதும், ஸர்வதனங்களால் நிறைந்ததுமான வஸுமதியைத் தானம் பண்ணினாலும், அதைக் காட்டிலும் வித்யாதானமே மேம்பட்டு விளங்கலாகும்.

ஜீவாத்மா, பரமாத்மா இவர்களின் ஐக்கியத்தைப் போதிக்கிற வேதங்களால் ஆத்மாவானது அடிக்கடி பிரகாசிக்கும்படி செய்யப்படினும் அது, குருவநுக்கிரஹம் கிட்டாதவர்க்கு அபரோக்ஷம் செய்துகொள்ள ஸாத்யமாகாது.

திருவருள் நிறைந்த ஸத்குருவின் கடாக்ஷங்கள் காருண்யஸாரமாகிற ஜலத்தால் நிறைந்து இஷ்டப்பட்டவைகளை யளிப்பதில் கற்பக விருக்ஷங்களுக்கொப்பாகக் குளிர்ந்துகொண்டு மனத்தின் தாபங்களை யடக்குகின்றன.

ஜந்மம், கிழத்தனம், மரணம் முதலியவற்றால் பயங்கரமாயும் பெரிய கனவாயும் விளங்குகிற, மாயையால் தோன்றும் இந்த ஜகத்தில், நிமிஷந்தோறும் அதிகமான தாபங்களால் தபித்துக்கொண்டு அஹங்காரமாகிற புலியால் பிடிக்கப்பட்டு யாம் வருந்துகிறோம். அப்படி வருந்தும் நம்மை ஸத்குருவானவர் மிகுந்த தயையால் அப்பெருந் தூக்கத்திலிருந்து விழித்துக்கொள்ளச் செய்வார். அவ்விதமான ஸத்குருவையடைய யாம் ஜன்மகோடிகளில் தவஞ்செய்திருத்தல் வேண்டும். அத்தவங்களின் பக்குவம் நேருங்கால் அக்குரு நமக்குத் தோன்றுவார். அவர் பொறுமை, அடக்கம், காருண்யம், அநுக்கிரஹசக்தி இவைகள் வாய்ந்தும், வேதங்களைக் கசடறக் கற்றும், பிரத்தியக்ஷமாகவோ அல்லது பரோக்ஷமாகவோ உள்ள போகங்களில் பற்றற்றும், கர்மசாதனங்களில் விருப்பமில்லாமல், பிருமாநுஸந்தானத்திலேயே நிஷ்டையுள்ளவராயுமுளர். அவர்கள் அப்படித் தோன்றுவதும் பிறர்களின் அநுக்கிரஹத்திற்காகவே ஏற்படும். அப்படித்தோன்றும் குருவின் தரிசனமும் ஸத்சிஷ்யனுக்கே லபிக்கும். அவ்விதமான சிட்டனையடைந்த ஸத்குருவும் அடையாளங்களால் அவன் அறியாமையையறிந்து, உலகவாஸனையால் கவரப்பட்ட அவன்மனத்தை நிலைநிறுத்தி ஜாதிமுதலான தேகஸம்பந்தமான பொய்த்தோற்றங்களையகற்றி சுத்தஸ்வரூபத்தை ஸ்வாநுபவத்திற்காகும்படி அருள்புரிவார். அச்சிட்டனும் ஸமஸ்தமான அநித்திய

வஸ்துக்களில் பற்றும் மூன்று ஈஷணைகளையொழித்தும், சமம் முதலிய குணங்கள் வாய்ந்தும் இருப்பான்.

மாலுமி கப்பலைக்கொண்டு கடலிலிருந்து பிரயாணிகளை அக்கரை சேர்ப்பதுபோல், ஆசாரியனாகிற நாவிகன், ஞானமாகிற கப்பலைக்கொண்டு ஸத்சிஷ்யனாகிற பிரயாணியைஸம்ஸாரக் கடலிலிருந்து கரையேற்றுகிறார் என்று வேதமோதுகிறது.

காந்தார தேசத்தில் ஒரு திருடன், தன் திருட்டுவெளியாகாமலிருக்கவேண்டியதற்காகத் தன் திருட்டையறிந்த ஒருவனை, கைகளையும், கண்ணையும் கட்டிக் காட்டில் விட்டுவிட்டான். அப்போது ஜனஸஞ்சாரமில்லாததும், புலிமுதலிய கொடிய மிருகங்களால் நிறைந்ததுமான வனத்தில் அம்மனிதன் திசையறியாமல் கதறினான். அப்போது ஒரு தயாளு தற்செயலாய் அங்குவந்து, அவன் கட்டையவிழ்த்து விழிக்கச்செய்து இத்திசையை நோக்கிச் செல்வாயாகில் உன்னூர் சேரலாம் என்றார். அவனும் அப்படியே ஒரு கிராமத்திலிருந்து மற்றக் கிராமத்தை விசாரித்துக்கொண்டு, அவர் வார்த்தைப்படி மார்க்கத்தையறிந்து தன்னிடஞ்சேருவானாயினான்.

அங்ஙனமே, மோஹமாகிற வஸ்திரத்தால் கட்டுண்டு ஈஷணைகளால் பாதிக்கப்பட்டு, புண்யபாவங்களாகிற திருடர்களால் தேஹங்களாகிற வனங்களில் தடுமாறும்படி விடப்பட்ட யாம் அவஸ்தைப்படுகிறோம். அதாவது, நான் தேவதத்தனின் குமாரன், இவர்கள் என் புத்திரர்கள், நான் சுகமுள்ளவன், நான் துக்கமுள்ளவன், எனது பிள்ளையிறந்தான், என் செல்வம் தொலைந்தது, நான் தொலைந்தேன், எனக்கு யார்கதி, நான் எவ்வண்ணம் ஜீவிப்பேன் என்று ஒவ்வொருவரும் தவிக்கிறோம். அத்தருணம் புண்யபரிபாகத்தால் கருணாமூர்த்தியான தேசிகருடைய தர்சனம் கிடைக்குமாயின், அவர் திருமொழியால் ஸம்ஸாரதோஷங்களை நன்றாயறிந்து, வைராக்கியமும்பெற்று, நீ ஸம்ஸாரியல்ல, தேவதத்தனின் குமாரனுமல்ல என்று நன்குபோதிக்கப்பட்டு, காந்தாரதேசமடைந்தவன்போல், தக்ஷணமே அஞ்ஞானத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, பரமஸுகிகளாவோம்.



முன்னொருகாலத்தில், சாக்யமுனி என்று மறுநாமம்பூண்ட கௌதமபுத்தரால் பிரபலித்த பௌத்தமதத்தாலும், அதன் உட்பிரிவான ஜைனமதத்தாலும், இன்னும் எத்தனையோ துர்மதங்களாலும், பிணியுற்றவன் மெலிந்துபோவதுபோல், நமது ஸித்தாந்தம் க்ஷீணித்துவிட்டது. அப்போது நமது ஸித்தாந்தத்தை நிலைநாட்டவே ஸ்ரீபகவத்பாதாள் காலடியிலவதரித்து, பால்யத்திலேயே ஸந்நியாஸம்பூண்டு, வைதிகப்பிரமாணங்களாலும், அவைகளுக்கிணையான யுக்திவாதங்களாலும், அத்துர்மதங்களை வேரறக்களைந்து நமது ஸித்தாந்தத்தை நிலைநாட்டினார்கள். தவிரவும் வேதாந்த ஸித்தாந்தங்களை, மூன்று பிரஸ்தானங்களாலும், அற்பமதிகளுக்கேற்றவாறாய்ப் பிரகரணங்களாலும் நன்குபுகட்டி, கீர்த்திசரீரத்தால் இப்போதும் பிரகாசித்து வருகின்றனர். அவ்வாசாரியரத்னத்தின் அநுக்கிரஹம் வாய்ந்து, பின் தோன்றும் ஸத்குருக்களும் ஸத்சிஷ்யர்களுக்கு உபதேசந்தருகின்றனர். அப்பரமாச்சார்யனிடத்தில் மனோவாக்காயங்களால் வணக்கத்தைச் செலுத்தி சாஸ்திர விசாரந் தொடங்கவேண்டும்.

ஸத்குருக்களிடத்தில் முறைப்படி உபதேசம் செய்துகொள்ளல் வேண்டும் என்பது, சாந்தோக்கியம், 7-வது அத்தியாயத்தில் ஸநத்குமாராக்யாயிகையில் செம்மையாய் விளங்குகிறது.

நாரதர் ஸகலசாஸ்திர பாரங்கதராயிருந்தாலும், பாண்டித்யாபிமானத்தை வெறுத்து ஸத்குரூபஸதனம்பண்ணி, கிரமமாய் உபதேசம் பெற்றார். ஸத்குரூபஸதனத்தால் அறியப்படும் ஞானமே, கல்மஷங்களைப்போக்கி ஸ்வரூப ஸாக்ஷாத்காரத்தை யுண்டுபண்ணும் என்று அநேக ஆசிரியர்கள் ச்ரோதவ்ய வாக்கியத்தில் நியமவிதியையொப்புக்கொண்டிருக்கின்றனர்.

வைதேஹனான ஜனகமஹா ராஜனும் யாஞ்யவல்கியரிடம் உபஸதனஞ் செய்தே பிரும்மவித்தையைப் பெற்றான். எவர் ஸத்குருவினிடம் உண்மையான பக்தியுள்ளவரோ அவருக்குத்தான் சொல்லப்படாத விஷயங்களும் விளங்கும். பகவத்கீதை 18வது அத்தியாயம் 67வது ஸ்லோகத்தில் அபக்தாய என்ற பதத்தால், ஸத்குரு பக்தியில்

லாதவனுக்கும் அசுச்ரூஷவே என்ற பதத்தால், ஸத்குரு பக்தியுள்ளவனாயிருந்தாலும் பணிவிடை செய்யாதவனுக்கும்; உபதேசிக்கலாகாதென ஸ்ரீபகவான் அர்ஜுனனுக்குப் போதித்திருக்கிறார். இவ்வண்ணமே பகவத்கீதை 4-வது அத்தியாயம் 34வது ஸ்லோகத்தால், பிரணிபாதம் முதலானதால் தேசிகரிடமிருந்து முக்கியசாதனமான ஞானத்தையறிந்துகொள், ஸாக்ஷாத்காரத்தாலுதித்த வஸ்துவின் உண்மையையறிந்த பண்டிதர்களான தேசிகர்கள் சமாதிசாதனமமர்ந்த உனக்கு, ஸம்ஸாரபோதகமான வித்தையையோதுவார் என்று பகவான் அர்ஜுனனுக்கு உபதேசித்திருக்கிறார்.

K. V. சுப்பிரமணிய சாஸ்திரிகள்,

---

## காமந்தகீய நீதிசாரம்.

(104-ம் பக்கத்தொடர்ச்சி.)

35. வர்ணாச்சிரம தர்மங்களை அறிந்து அதன்படி நடந்து அவற்றைக் காப்பாற்றும் அரசன் சுவர்க்கலோகத்தை அடைவான்.

நான்காவது பிரகரணம் முற்றிற்று.

---

### ஐந்தாவது பிரகரணம்.

தண்டநீதியின் சிறப்பைக் கூறுவது.

36. மன உறுதியுள்ள அரசன், குடிகளுக்கும் தனக்கும் இகம் பரம் இரண்டிற்கும் காரணமாயிருப்பதனால் தண்டதாரனை யமனைப் போல் தண்டத்தை வேறுபாடில்லாமல் செலுத்த வேண்டும்.

37. அரசன் கடுமையான தண்டனைகளைச் செய்வதால் குடிகளுக்குப் பயத்தை உண்டாக்குகிறான். குறைவான தண்டத்தினால் குடிகளால் அவமதிக்கப் படுகிறான். ஆகையால் குற்றத்திற்குத்தகத் தண்டிக்கிற அரசன் எல்லாராலும் புகழப்படுகிறான்.

38. குற்றங்களுக்கு ஏற்பத்தண்டனை விதித்துவரும் அரசனுக்கு அறம் பொருள் இன்பங்கள் ஓங்கிவளர்கின்றன. தோன்றினபடி தண்டனை விதித்துவந்தால் வனத்தில் வசிக்கின்றவர்களுக்கும் கோபம் உண்டாகும்.



39. குடிகளாலும் சாஸ்திரங்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டுப் பயத்தை உண்டாக்காத தண்டத்தை அரசன் செலுத்தவேண்டும். அது செல்வத்திற்குககாரணமாகும். குடிகளை நடுங்கச்செய்வதால் அதர்மம் உண்டாகும்; அதனால் அரசனுக்குக்கேடுண்டாகும்.

40. தண்டனை இல்லாதுபோயின் உலகம் நல்லவழிகளை விட்டு விலகி ஒன்றை மற்றொன்று அழித்துவிடுமானதினால் சிறு மீன்களை விழுங்கிவிடும் பெரிய மீன்களின் தன்மைபோல உலகம் அழிந்துவிடும்.

41. அரசன் முறைப்படி தண்டத்தைச் செலுத்துவதால் காமத்தாலும் உலோபம் முதலியவற்றாலும் நாசத்தை அடையக்கூடியதும் பற்றுக்கோடற்றதுமான உலகத்தைக் காப்பாற்றினவனாக ஆகிறான்.

42. இயற்கையில் விஷயசுகங்களுக்கு வசப்பட்டதும் பெண்களினிடத்திலும் பொருளினிடத்திலும் ஆசைகொண்ட இவ்வுலகம் தண்டபயத்தினால் அடக்கப்பட்டுப்பெரியோர்கள் அனுசரிததவழியில் நிலைபெற்றிருக்கிறது.

43. குலஸ்திரீயானவள், தண்டனைக்குப்பயந்துமெலிந்தவனும் அங்கஹீனனும் நோயாளனும் ஏழையுமான தன் கணவனுக்குப் பணிவிடை செய்வதுபோல், அரசனுடைய தண்டத்திற்குப்பயந்து அநேகமாக உலகம் நல்லவழியில் நிலைபெற்றுவருகிறது. அங்ஙனமில்லாவிடின் விஷயசுகத்திற்கு வசப்பட்ட இவ்வுலகத்தில் நல்ல நடத்தை என்பது அரிதாய்விடும்.

44. இவ்வாறு தண்டனையின் பாகுபாட்டை நன்றாக அளந்தறிந்தவனும் சாஸ்திரத்தின் வழியைப்பின்பற்றுகிறவனும் இந்திரியங்களை அடக்கினவனுமான அரசன் தண்டத்தை முறைப்படி செலுத்துவதால் குடிகளை அவற்றிற்குரிய வழிகளில் நடத்துகிறான். சமுத்திரத்தை அடைந்த நதிகள்போல வரும்வழிகள்பெருகி அவனை அடைந்த செல்வங்களும் பின்னர் அவனைவிட்டு நீங்குவதில்லை.

ஐந்தாவது பிரகரணம் முற்றிற்று.

---

## மூன்றாவது சர்க்கம்.

### ஆறாவது பிரகரணம்.

### நல்லொழுக்கத்தை வரையறுப்பது.

1. அரசன் தண்டதாரனான யமனைப்போல் குடிகளிடத்தில் தண்டத்தைச் செலுத்திப் பொறுமையுடனிருந்துகொண்டு பிரம்மாவைப்போல் குடிகளை மகிழ்ச்சியடையும்படி செய்யவேண்டும்.

2. இன்சொல்கூறல், அருள்உடையனாயிருத்தல், ஈகையுடையவனாதல், மெலியோர்களையும் தன்னையடைந்தவர்களையும் காப்பாற்றுதல், பெரியாரைத்துணைக்கோடல் ஆகிய இவைகள் நல்லோர்களுடைய விருதங்களாம். மேற்கூறியவை நல்லனவாயும் அனுகூலமானவையாயும் ஆகின்றன. (தொடரும்.)

பத்திராசிரியர்.

---

## பிர்ம்ம சாம்ராஜ்ஜியப் பிராது.

சகலலோகங்களுக்கும் நியாயாதிபதியாய் விளங்குகின்ற தர்மதுரையவர்கள் சமட்சேமத்துக்குக் காயாபுரிச் சீமையைச் சார்ந்த சாமங்கலம் தாலுகா சேகரம் மண்டல மாணிக்க மாகாணத்தைச் சேர்ந்த கருவூரிலிருக்கும் பரமநாதன் குமாரன் ஆத்மநாதன் மதம்—சத்திமதம்; குலம்—சுக்குலம்; வயது—என்றும் ஓர்வயது உள்ளவனாகிய நான் எழுதிக்கொடுத்த பிராது.

வாக்குமூலம் என்னவென்றால்:

நான் குடியிருக்கின்ற அறிவானந்த புரத்தில் சுயம் பிரகாசக் கண்வாயில் அருள் நீர் மடைப்பாசனத்தில் ஞானச்செய்கால், நிலம் காணியும் நான் பூர்வீகமா யனுபவித்து வந்ததில் எனது பார்வைத் தாழ்வாய் அஞ்ஞானக் கோரைகள் பற்றிச் சிலநாள் தரிசுகிடையாய்க் கிடந்ததை என்னுடைய புத்திவிவேகத்தினாலே முத்தி விவசாயம் செய்யவேணு மென்று முயற்சித்து வருகையில்,

| | |
|---|---|
| கோசாமிபுரம் காமாக்ஷி நாயக்கன் | 1 |
| கண்டப்பனைக்கனூர் கோபாக்கினியாபிள்ளை | 2 |



| | |
|---|---|
| இருதயப்பட்டி இச்சையாபிள்ளை | 3 |
| நாவல்பட்டி அறுசுவைப் பெருமாள்பிள்ளை | 4 |
| மூக்கனேந்தல் கந்தப்பையன் | 5 |
| உச்சிவருத்தாம்பட்டி சோம்பல்நாதன் | 6 |

ஆகிய இவர்களும் இன்னுஞ் சில துற்குணருமாய்க் கூடிக்கொண்டு ஒருவர் பின் ஒருவராய் என்விவேக ஏரைப்பூட்ட வொட்டாமல் புத்திக் கலப்பையை யொடித்து மனக்கொழுவை முறித்துச் சித்தமேழியைப் பிளந்து என்னையு மின்னுமென்று உருத்தோன்ற வொட்டாமல் அடித்ததற்குச் சாக்ஷிகள்:

1. சதுர் வேத நகரம் கல்விநாயகம்பிள்ளை.
2. சாத்துவிக முதலியார்.
3. வாடாதபுரம்—சுழுத்திக்கோனார்.

இவர்களு மின்னுஞ் சில சற்குணரும், சாக்ஷியிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் தருவித்து நன்றாய் விசாரித்து நான் குடியிருக்கிற அறிவானந்தபுரத்தில் சுயம்பிரகாசக் கண் வாயில் அருள் நீர் மடைப்பாசனத்தில் ஞானச்செய், நிலங்காணியு மெனக்குப் பூர்வீகம்போலே கிடைக்கும்படிக்குத் திட்டஞ்செய்து ரக்ஷித்துக்காப்பாற்ற வேண்டியது.

இந்தப்படிக்கு பிராது வாக்கு மூலங்கொடுத்தேன்.

பரமநாதன் குமாரன் ஆத்மநாதன்.

குருபாதமே கதி.

தம்ம நாயக்கன்பட்டி அரு. முத்துசெட்டியார்.

குறிப்பு:—இஃது வேதாந்த விஷயமாய்க் கற்பித்திருப்பது, மிகவுமறிஞர்கள் பாராட்டத்தக்கது. ஷை செட்டியாரவர்கள் வீட்டிலுள்ள வேதாந்த ஏடுகளின் மத்தியில் இப்படிக்கற்பித ஏடுகள் கிடந்தன. அதிலொன்று அகப்பட்டது என்றெழுதியனுப்பி யுள்ளார்கள். இன்னுமிப்படி விஷயங்கள் தருவாராயின் அறிவாளிகள் பார்த் தானந்தமடையும் வழிக்கு ஓர்சாதனமாகவிருக்கும்.

பொறுப்பாளர்.

# வைத்தியக்குறிப்பு.

(115-வது பக்கத்தொடர்ச்சி.)

---

நமது முன்னோர்களிடம் தொன்றுதொட்டு அனுஷ்டானத்திலிருந்து வந்திருக்கிற உயரிய விஷயங்கள் அளவிறந்தன. அவற்றுள் மிகவும் சிறந்தது ஆகாரநியமம். அதாவது நாம் தினம்சாப்பிடுகிற பதார்த்தங்களில் கவனிக்கவேண்டிய விஷயம்.

நாம் ஒவ்வொரு நாளும் எதுகிடைத்தாலும் வரம்பின்றிச்சாப்பிட வேண்டியதென்ற கொள்கையைவிட்டுக் காலதேச தேகநிலைமையை அனுசரித்து எதை விலக்கவேண்டுமோ அதை விலக்கியும் எதைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமோ அதைச் சேர்த்துக்கொண்டும் வரவேண்டும். அப்படிச் செய்வதினால் சரீரத்துக்கு வரக்கூடிய அநேகம் வியாதிகள் வராமல் தடுக்கப்படுகின்றன. அவ்விதமின்றி நினைத்த காலங்களில் தோன்றியபடிக்கெல்லாம் கிடைத்தமட்டிலும் உண்பதினால் அநேகம் வியாதிகள் உண்டாக ஹேதுவாகிறது.

நம்மிந்தியாவில் தற்காலம் நம்மிந்திய சகோதரிகளுக்கு பெரும்பாலும் கற்பம் உண்டாகிறது மிகவும் அரிதாகவிருப்பதும், உண்டானாலும் பூர்த்தியாகாமல் குறைமாதங்களில் அழிந்து விடுகிறதும், பத்துமாதங்களும் குறைவின்றி நிறைந்து குழந்தை பிறந்தாலும் அடிக்கடி நோய்வயமாகியும் துர்ப்பலத்துடனுமிருக்கிறதையும் நாளுக்குநாள் பலம், புத்தி, அழகு, ஆயுள் இவைகள் குறைந்து வருகிறதிற்கும் முக்கியமான காரணங்களிருக்கின்றனவென்றாலும் அவற்றுள் ஆகாரவிஷயமும் மறக்கமுடியாத தொன்றெனவே கருதவேண்டும். எந்தக்காலத்தில் எந்தப்பொருள் சரீரத்திற்கு அவசியமாக வேண்டியிருக்கிறதென்பதையும் அப்படி வேண்டியிருக்கிற பொருள் எந்தப்பதார்த்தத்தில் இருக்கிறதென்பதையும் ஒன்றினால் மற்றொன்று விரோதமின்றி இருக்கிறதென்பதையும் நன்கு தெரிந்துகொண்டும் அப்போதையகால தேக தேச நிலைமைகளுக்கு ஏற்றவாறுமாகக் குறிக்க காலங்களில் மிதமாக உண்ணவேண்டும். காப்பிசாப்பிடுகிற தென்ற துர்வழக்கமானது நம்மிந்தியாவில் கொஞ்சங்கொஞ்சமாக ஆரம்பித்து இப்போது அலவரம்பின்றி ஒவ்வொரு வீடுகளிலும் புகுந்துவிட்டது. அதிலும் நம்மிந்திய



சகோதரிகளுக்கு மிகவும் ஆப்தநேசனாகவே விளங்குகிறது. பதிபக்தியில் சிறந்து விளங்கும் நம்மிந்திய சகோதரிகளிடம் காப்பிக்கு முன்னால் கணவன் மொழியும் நிற்கவஞ்சுகிறது. காப்பிசாப்பிடுகிறதினால் ஏற்படுகிற கெடுதலகளை நமது பெண்மணிகள் கொஞ்சமாவது தெரிந்துகொண்டால் எவ்வளவோ நன்மைகள் உண்டாகக் கூடும். அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற துர்பலத்திற்கும் கெற்பப்பையானது முற்றிலும் கெற்பத்தைத் தாங்கிக்கொள்ளச் சக்தியற்றிருப்பதிற்கும் சொற்ப வேலைசெய்யினும் அதிகக் களைப்புண்டாவதிற்கும் காப்பியே காரணமாவதுடன் பணம் வரவுகுறைந்த நம்மிந்தியர்களுக்கு வீணை பெருஞ்செலவாகவுமிருக்கிறது. காப்பிக்கடைகள் நாளுக்குநாள் விருத்தியாகிக்கொண்டு வருவதால் வேண்டிய நெய், பால், தயிர் முதலானவைகளுக்கும் பஞ்சமேற்பட்டு விட்டது. கொழுப்புச்சோதகடைநெய்கிடையாது. வெண்ணெய் காய்ச்சின நெய்யென்று சொல்வோர்களும் பாதிக்குமேல் கடைநெய் கலந்தே வியாபாரம் செய்கிறார்கள். பால் முழுமையும் காப்பிக்கடைகளுக்குக் கொண்டுபோகப்படுகிறது; ஆனதால் எந்தமட்டிலும் காப்பிசாப்பிடாமல் நிறுத்தக்கூடுமோ அவ்வளவுக்கும் சரீரசௌக்கியம், பொருள் லாபமிருக்கிறதென்று தெரிந்துகொள்ளவேண்டியதுடன் அந்தப்படிசெய்ய முயலவேண்டும். சிலபேர்கள் காப்பிக்குப்பதிலாகக் காலைநேரங்களில் ஏதாவது சூடாகவும் ஜலமாகவுமிருக்கிற ஓர் பானமிருந்தால் காப்பிகுடிப்பதை நிறுத்திவிடக் கூடுமென்று சொல்லுகிறார்கள். காப்பிக்குப்பதிலாக அடியில் வரைந்துள்ள சாமான்களைக் கொண்டு கஷாயம்செய்து பசும்பாலுடன் கலந்து சர்க்கரையும் கொஞ்சம் சேர்த்து காலையில் சாப்பிட்டுவந்தால் பித்தம், வாயு இவைகள் சம்பந்தமான வியாதிகளை நிவிர்த்தி செய்வதுடன் சரீரத்திற்கும் அளவிறந்த நன்மைகளையும் தரக்கூடியது.

## சரக்குகளின் விபரம்.

1. சுக்கு பலம்
2. கொத்தமல்லிவிதை பலம்
3. ஜீரகம் பலம்

4. நன்னாரிவேர் பலம் 1
5. ரோஜாமொட்டு பலம் 1

இந்த ஐந்து சாமான்களையும் மேற்கண்ட இடைப்படிக்கு வாங்கி இளம் வறுப்பாக வறுத்து இடித்து வைத்துக்கொண்டு கொதிக்கிற வெந்நீரில் கால்பலம் பொடிசேர்த்து அரைமணி நேரம் ஊறியபின் வடிகட்டிப் பாலுடன்கலந்து சர்க்கரை சேர்த்து உபயோகிக்க வேண்டும். (தொடரும்)

O. R. S. ராகவய்யங்கார்
ஆயுர்வேத டாக்டர், மதுரை.

---

# தினமணி, (சூரியன்)

---

ஸ்வயஞ்ஜோதி ஸ்வரூபமாய் ஸகல புவனங்களையும் பிரகாசப் படுத்துகின்ற ஸூர்யமண்டலத்தில் பரமேசுவரனைத் தியானித்து பூஜா நமஸ்காராதிகளால் உபாஸிப்பவர்கள் சதுர்வித புருஷார்த்தங்களையும் பெற்று வாழ்வார்களென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

ஸூர்ய மண்டலத்தின் ஆவிர்ப்பாவம் ஸ்வரூபம் மண்டலாதி தேவதையான ஈசுவரனுடைய வைபவம மற்ற அங்கஉலாபங்கள் இவை யாவையுமுணர்ந்து உபாஸிப்பதே உசிதமாகும்.

## ஸூர்ய மண்டலத்தினுற்பத்தி

### 1. மயூகம்

ஸூர்ய மண்டலத்தினுற்பத்தியைப் பற்றி—"சாந்தோக்ய உபநிஷத்தில்" "ஸ்ருஷ்டியின் ஆரம்பத்தில் பஞ்சீகரணப்ரக்கிரியையினால் ஸ்தூலஸூக்ஷ்ம மஹாபூதஸமுதாயாத்மகமாக ஒரு அண்டம் உற்பவித்தது. அது ஒரு ஸம்வத்ஸரம்வரை அபின்னமாகவே இருந்து பிறகு இரண்டு பாகமாகப் பிரிந்தது. அதில் கீழ்பாகம் வெள்ளிமயமான கபாலமாய் மண்ணுலகமாகவும் மேல்பாகம் பொன்மயமான கபாலமாய் விண்ணுலகமாகவும் அமைந்தன. அண்டத்துக்குள் கர்ப்பத்தைச் சுற்றியிருந்த "ஜராயு" பர்வதங்களாகவும். "உல்பம்" மேகங்களாகவும் "தமனிகள்" நதிகளாகவும், அமைந்தன. நடுவிலிருந்த கர்ப்பம் "ஸூர்ய மண்டலமாகத் தோன்றிற்று" எனச்சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஸூர்யனே ஹிரண்ய கர்ப்பனென்ற ஸூத்ராத்மா=ஸகல ஸமஷ்டிப்பிராணன் "பிருஹதாரண்ய உபநிஷத்தில்" ஸ்ருஷ்டியின்ஆதியில் "ஸத்யம்" உண்டாயிற்று. அந்தஸத்யமே ஜகத்காரணம். ஸத்யத்தையே தேவர்கள் உபாஸிக்கிறார்கள். என்று சொல்லி "ஸத்ய மென்பது எது" என்ற பிரச்ன பூர்வமாக "இந்த ஆதித்யனேஸத்யம்" என்று சொல்லியிருக்கிறது. சாந்தோக்யத்தில் "இந்த ஸூர்யன் பூமி அந்தரிக்ஷம் முதலான எல்லாப்புவனங்களிலும் வஸிக்கும் பிராணிகளுடைய ஸமஷ்டிப் பிராணனாகிறான்" என்றும் "மைத்ராயணச்சுருதியில்" ஒருவனே இரண்டு விதமாய்ப் பிரிந்து ஆதிபௌதிகத்தில் ஸூர்ய னென்றும் அத்யாத்மத்தில் பிராணனென்றும் வியவகரிக்கப் படுகிறான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதமே ப்ரச்ன உபநிஷத்தில "ஆதித்யனே பஹி: பிராணன்" "ஸமஷ்டிப் பிராணன்" "ப்ராணோபநனன்" என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இந்தஸூர்யனே ஸமஷ்டிப்ராண ஸ்வரூபனான ஹிரண்யகர்ப்பன். ஸூர்யநமஸ்கார மந்திரத்திலும் "ஹிரண்யகர்ப்பாயநம:" என ஒரு மந்திரமும் கூறப்படுகிறது.

ஸூர்யனே மண்டலத்திலும் புருஷனிடத்திலும் ஆத்மா என வழங்கப்படுகிறார். ஸூர்யனுக்கு மண்டலத்தில் "அஹ:" என்றும் புருஷனிடத்தில் "அஹம்" என்றும் பெயர். ஸூர்யனை ஆத்மாஹம் பாவனையாக உபாஸிக்கவேணும் என்று உபநிஷத்து கூறும்.

யாகங்களில் உத்காதா என்ற ஸாமவேதிகள் கானம் செய்யும் க்ரமத்தில் "ப்ரஸ்தாவம்" "உத்கீதம்" "பிரதிஹாரம்" "உபத்ரவம்" "நிதனம்" என ஐந்து பங்கிகளுண்டு. அவைகளிலிரண்டாவதான உத்கீத பங்கியினாம்பத்தில் முதலங்கமாககானம் செய்யப்படும் ஓங்கார மந்திரத்தினால் ஸூர்ய மண்டல மத்யஸ்திதனான பரமேசுவரனையே உபாஸிக்கும்படியாக சாந்தோக்ய உபநிஷத்து கூறுகிறது.

ஸூர்யமண்டலத்தின் அதிதேவதையான பரம புருஷனுக்கு வியாஹ்ருதி மந்திரத்தின் முதல்பாகமான "பூ:" என்ற அட்சரம் சிரஸாகவும் மத்யபாகமான "புவ:" என்ற இரண்டு அட்சரங்களும் புஜங்களாகவும் மூன்றாவது பாகமான "ஸுவ:" என்ற இரண்டு அட்சரங்களும் பாதங்களாகவும் இப்படி மந்திர ஸ்வரூபமாக தியானிக்கும்படி மைத்ராயண உபநிஷத்து கூறுகிறது.

ஸூர்ய மண்டலத்தை ரிக்வேத ஸ்வரூபமாகவும் மண்டலத்தில் விளங்கும் ஜ்யோதிஸ்ஸை யஜூர்வேத ஸ்வரூபமாகவும் ஜ்யோதிஸ்ஸின் நடுவில் விளங்கும் பரமபுருஷனை ஸாமவேத ஸ்வரூபமாகவும் இப்படி வேதத்ரய ஸ்வரூபமாக தியானிக்கும்படி தைத்திரீய உபநிஷத்து கூறுகிறது.

பூர்வான்ஹ காலத்தில் ரிக்வேத பலத்தாலும் மத்யான்ஹ காலத்தில் யஜூர்வேத பலத்தாலும் அஸ்தமன காலத்தில் ஸாம வேத பலத்தாலும் ஸூர்யன் பிரகாசிக்கிறார். என்று காடகசுருதி கூறுகிறது.

சாந்தோக்ய உபநிஷத்தில் "த்யௌ: என்ற விருக்ஷ ஸ்கந்தத்தில் அந்தரிக்ஷம் என்னும் மதுபடலத்தில் ஸூர்ய மண்டலமென்னும் மது இருக்கிறது. வண்டுகளால் பலபல புஷ்பங்களிலிருந்து கிரஹித்து ஒன்று சேர்க்கப்பட்ட மதுவை மற்றவர்கள் புஜிப்பது போல ரிக்வேதாதிகளாகிய புஷ்பங்களிலிருந்து மந்திரங்களெனும் வண்டுகளால் மஹான்கள் அந்தந்தக் கர்மங்களில் விநியோகப் படுத்துகிற மந்திர உபாஸனா விசேஷம் என்ற ஸாதனத்தைக் கொண்டு ஒன்று சேர்க்கப் பட்டதும் மிகவும் மதுரமானதுமான திவ்யமது இந்த ஸூர்ய மண்டலமாகும். இந்ததிவ்ய மதுவை மண்டலத்தினின்று கீழ்புறமாகச் செல்லும் கிரணங்களின் வழியாக வஸுக்களும் தென்புறமாகச் செல்லும் கிரணங்களின் வழியாக ருத்ரர்களும்மேல்புறமாகச் செல்லும் கிரணங்களின் வழியாக ஆதித்யர்களும் வடபுறமாகச் செல்லும் கிரணங்களின் வழியாக மருத்துக்களும் ஊர்த்வபாகமாகச் செல்லும் கிரணங்களின் வழியாக ஸாத்யர்களும் புஜிக்கிறார்கள். நம்மைப் போல் வாயால் சாப்பிடுவதில்லை. பார்வையாலேயே திருப்தியடைகிறார்கள்.



## 2. மயூகம்.

ஸூர்ய கிரணங்களுக்கும் நமக்குமுள்ள சம்பந்தம் ஸூர்யனிடமிருந்துவெளிவரும் கிரணங்கள் ஸகலபிராணிகளுடைய சிரஸில்பிரமரந்திரமார்க்கமாக ஹிருதய நாடிகளில் பிரவேசித்து ஜீவவர்க்கங்களைப் போஷணம் செய்கின்றன. "ஆதித்யன் பஹிராத்மா" "பிராணன் அந்தராத்மா" பஹிராத்மாவான ஆதித்யன் தன்கிரணங்களின் ஸமன்வயத்தினால் அந்தராத்மா வாகிய பிராணனோடு சேருகிறான். நாடி கிரண ஸம்பந்தத்தா லுண்டாகும் கெதாகத க்ரமத்தை ஸூக்ஷ்ம புத்திகளான யோகிகள் அறிவார்கள்.

நாம் செய்யும் கர்மாக்களில்அக்னி முகமாகவும் அதிதிமுகமாகவும்கொடுக்கப்படும் ஹவ்பகவ்யங்களின்ஸாராம்சத்தை ஸூ கிரணத்வாரா கிரஹித்து அந்தந்தத் தேவதைகளுக்குதவுகிறார். "அக்னௌ ப்ராஸ்தாஹுதிஸ்ஸம்யகாதித்ய முபதிஷ்டதே ஆதித்யாஜ் ஜாயதே வ்ருஷ்டி: வ்ருஷ்டேரன்னம் தத: ப்ரஜா:" என்னும் கீதா வசனப்படி ஸூர்யன் கிரணமார்க்கமாகவே ஹோமம் செய்யப்பட்ட ஹவிஸ்ஸுகளின் ஸாராம்சத்தைக் கிரஹித்துத் தேவதைகளுக்கு அமிருதமாகவும் பிதருக்களுக்கு ஸ்வதையாகவும் மனுஷியர்களுக்கும் விருஷ்டியின் மூலமாகவும் ஔஷதிகளையபிவிருத்திசெய்து அன்னமழையாகவும் நாகங்களுக்குக் காற்றாகவும் அஸுரர்களுக்கு ருதிரமாகவும் விகல்பித்து உதவுகிறார். (தொடரும்.)

அ. சங்கராசாஸ்திரி,
சோழவந்தான்.

---

# (அனுபவஸங்கீதம்) ஈசானம்.

(106-ம் பக்கத்தொடர்ச்சி)

அந்த மூன்று விதமான நாதங்களும் மூலாதாரத்திலிருந்து சிரஸு பரியந்தம் ஐந்துவிதமான நாமதேயங்களோடு தோன்றும். அவைகளின் பெயர்களாவன: மூலாதாரத்திலிருந்து ஹிருதய பரியந்தம் அதிஸூக்ஷ்மமென்றும், ஸூக்ஷ்மமென்றும், ஹிருதயத்திலிருந்து கண்டம்வரை, புஷ்டமென்றும், அதிபுஷ்டமென்றும், கண்டத்திலிருந்து சிரஸுவரை வியாபித்து வாக்கினால் பிரகாசிக்கின்ற நாதத்திற்கு க்ருத்ரிமமென்றும் பெயராகும், இந்த நாதங்கள்

ஐந்தும் பரமசிவனுடைய, ஸத்யோஜாதம், வாமதேவம், தத்புருஷம், அகோரம், ஈசானம் என்ற ஐந்து முகங்களிலுமிருந்து உற்பத்தியான தாகக் கான சாஸ்திரங்களில் விளக்கப் பட்டுள்ளது. இவைகளில் யாக்யவல்கிய ஸ்மிருதிகளில் ஆதிப்பொருளான பரமசிவததினிடமிருந்து ஐந்துகிருஹங்கள் உற்பததியானதாகவும் கூறப்பட்டுள்ளது. முக்கியமாக நாதசாஸ்திரத்திற்கும் ஜோதிச் சாஸ்திரத்திற்கும் அத்தியந்தம் ஸம்பந்த முள்ளதாகவும் பரமசிவத்தின் திருமுகங்களிலிருந்து உற்பத்தியான நாதங்களையே ஸ்வரங்களென்றும் கூறுவார்கள். ஆதியில் உற்பத்தியான ஸ்வரங்கள் ஐந்தே. அவ்வைந்து ஸ்வரங்களிலிருந்தும் வேறு இரண்டு ஸ்வரங்கள் உற்பத்தியாகி ஸ ரி க ம ப த நி ஏழுஸ்வரங்களாக நிகாற்றுவிளங்கின. ஐந்து கிரஹங்களில், பூர்ய சந்திரர்களென்ற முக்கிய கிரஹங்களிலிருந்து சனி புதன் கார உற்பத்தியாகி ஏழுகிரகங்களாக ஆனது போல் ஸூரிய சந்திரஸ்தானங்களான, ஷட்ஜ பஞ்சம ஸ்தானங்களிலிருந்து, காந்தார ரிஷபங்கள் என்ற ஸ்வரங்கள் இரண்டும் தோன்றின. ஸப்த ஸ்வரங்களிலிருந்து, பன்னிரண்டு வீடுகள் அமைந்திருக்கின்றன. அதுபோல் ஏழுகிரஹங்களுக்கும் பன்னிரண்டு வீடுகள் ஏற்பட்டிருக்கின்றன. ஸூரியனிடத்துத் தோன்றும் சாயாசக்தியான சந்திரனைப்போல் ஷட்ஜ ஸ்வரத்தினிடமிருந்து பஞ்சமமென்ற சக்தி யம்சமான ஸ்வரம் தோன்றும். இதைப்பற்றிய ஸ்வரோத்பத்தி விஷயங்களை வெளியிடுவாம்.

(இன்னும்வரும்)

L. முத்தையா பாகவதர்,
ஸ்ரீ தியாகராஜஸங்கீத வித்யாலயம், மதுரை.

---

# மதிப்புரை.

---

## (1) "கம்பநாடர்"

இப்பெயர் புனைந்த மாதாந்த இராமாயண சஞ்சிகை காரைக்குடியினின்றும் ருதிரோத்காரிஹூ ஆவணிமீ முதல் வெளிவந்து லவுகின்றது. அது, தமிழுலகத்திற்கு நல்விருந்தாக அமைந்துள்ளது. அவ்விருந்தினை ஓம்பவேண்டியது தமிழ் மக்களாவார் கடமையாம். அது நான்கு பகுதிகளாக இப்பொழுது பகுக்கப்பட்டுள்ளது. அப்பகுப்புக்கள் முதல் மலர் நீங்கலாக மற்றமலர்களில் தொடர்ந்து வருகின்றன. முதலாவது "கம்பரும் வான்மீகரும்" இதில் அவ்விருவரும் கூறிய விஷயங்களைத்தம்முள் ஒத்திட்டுப்பார்த்தல் பொருந்தியுள்ளது. இத்தகைய விஷயங்களில் தமிழர்கள் ஆராயத்தொடங்குவது மிகவும் இன்றியமையாததொன்றும். இரண்டாவது "கம்பராமயண ஆராய்ச்சி" இது தமிழர்கள், தங்கள் முன்னோர்கள் சரித்திரத்தைப் போற்றிவைக்கவில்லை என்னும் அபவாதச்சொல் நிகழாமற் பாதுகாக்கும் வழியாம். இதில் ஆசிரியர், நூல் இவ்விரண்டைப்பற்றிய ஆராய்ச்சியும் செய்யப்பட்டுள்ளது. மூனறுவது "கம்பராமயணக்கவி" இது, செய்யுள் திருத்தமாகவும், பெ புரை குறிப்புரையுடனும் கூடி விளங்குவது. நான்காவது கம்பராமயணவசனம்; இது கம்பராமாயணத்தின் கருத்தினை யாவருக்கும் எளிதில் விளக்குவது.

மேற்கூறிய நான்கு விஷயங்களையும் கூர்ந்து நோக்குவார்க்கு அவற்றைத்தமிழுலகிற்குதவிய அதன் ஆசிரியர் மோ. வே. கோவிந்தராஜையங்காரின் கல்வியறிவின் பெருமை நன்குவிளங்கும்.

இதன் ஐந்தாவது மலர் வெளிவந்துவிட்டது.

(இதன் வருடச்சந்தா ரூ. 5—0—0 வேண்டுவோர் கம்பநாடர் காரியாலயம், காரைக்குடி, இராமநாதபுரம் ஜில்லா என்று எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.)

---

(2) "நபிகள் நாயகமும் நான்கு தோழர்களும்" என்னும் புத்தகமும், 'தாஜ்மஹால்' என்னும் புத்தகமும் நமது பார்வைக்கு வந்துள்ளன. இவை, பா. தாவுத்ஷா என்னும் மஹமதியபுலவரால் இயற்றப்பெற்றன. இவற்றின் நடை மிகவும் இலளிதமாயமைந்துள்ளது.

இவற்றுள், முதலது, இஸ்லாம் மார்க்கத்திற்கு ஆதிகர்த்தாவாகிய மஹம்மது நபியவர்களின் சரிதமாகும். இம்மஹம்மது நபியவர்கள் சரிதம் இதற்குமுன் தமிழில்செய்யுள் நடையாகச்சீறுப்புராணத்தில் அமைந்து கிடந்தது. அப்புராணத்தை எட்டையாபுரம் சமஸ்தான வித்வானாய் விளங்கிய உமறுப்புலவர் என்னும் மஹம்மதியப் புலவர் இயற்றியுள்ளார். செய்யுள்-நடையினும், உரைநடையே பண்

டித பாமரஜனங்களாகிய இருதிறத்தாருக்கும் மிக்கநன்மை பயப்பதாம். "எச்சமயத்தோர் சொல்லும் தீதொழிய, நன்மைசெயல்" என்பவாகலின், பல மதங்களுக்கும் ஆசார்யர்களாய் விளங்கிய முன்னோர்களின் சொற்களும் செய்கைகளும் நன்மை பயந்து நிற்பனவாமாதலின், அவை மானிடஜாதியிற்பிறந்த எத்திறத்தவர்க்கும் அறிவுறுத்தப்பட்டு அவர்கள் சொல்வழிச்செலுத்தப்படுவது மிகவும் அவசியமாக வேண்டப்படுவதாம். அவ்வகையில் தமிழிற்கு விருந்தளித்த தாவுத்ஷா அவர்களுக்குத் தமிழுலகம் நன்றிபாராட்டும் என்பதைத் "தமிழரசு" தெரிவிக்கின்றது.

இ...(முதலது விலை 1—8—0 ரூபா ஆகும்.மற்றது விலை அணா 0—4—0 விஷத்து கூட்டுவோர் தாருல் இஸ்லாம் புஸ்தகசாலை, 16, 17 ஸக்கிண்டு ... ர்ச்சு, சென்னை என்று எழுதிப்பெறவும்.)

பத்திராசிரியர்.

---

## பத்திரிகா அபிமானப் பரிபாலனக்கொடை.

மதுரை ஜில்லா பழநித் தாலூகா இடைய கோட்டை ஜமீந்தாரவர்களும் பரோபகார சிந்தையுடையவரும் தமிழ் ஆங்கிலமாகிய இருபர்ஷை வல்லுநரும் பண்டித சிரோமணிகட்குப் பரிசளிக்கும் பண்புடைக்கொடையாளருமாகிய மகா-ா-ா-ஸ்ரீ ராஜமான்ய குமார முத்துவேங்கடாத்திரி நாயக்கரவர்கள் இத்தமிழரசுப் பத்திரிகை நிலைபெற்று நிலமிசைபுலாவுமாறும் எமக்கதிக ஊக்கம் கொடுக்குமாறும் ரூ 10—0—0 மணியார்டர் மூலம் இனம் செய்துள்ளார்கள். இன்னும் வருஷந்தோறு மெந்நாளும் உதவி செய்வதாகவும் வாக்களித்திருக்கின்றார்கள். தற்காலத்திலவர்கள் செய்தநன்றி 'காலத்தினாற்செய்த நன்றி சிறிதெனினும், ஞாலத்தில் மாணப் பெரிது' என்னுந் தெய்வப்புலமைத் திருவள்ளுவர் குறளுக்கிலக்கியமாக இருக்கின்றது. இவர்களைப்போன்ற ஜமீந்தார்கள் உதவி செய்ய முன்வருவார்களாயின் தமிழரசு ஓங்கிவளரு மென்பதிலையமில்லை. அன்னார்க்கு திரிகணங்களாலும் ஆயுள்விர்த்தி கல்வி செல்வ முண்டாவதாகப் பரமசிவனடியைப் பரவுதும். போறுப்பாளர்.

---

## விடுகதை வினா.

எண்ணருங் கலைஞான மெய்துகவி வாணரே
யெட்டெழுத் தாமொர் நாலின்
ஏகரா லெட்டக் கதமீ ரிரண்டிரண்
டெட்டடவி யிணையா றயில்
நண்ணிரண் டேழெட்டு வெற்றியைந் தாறுயா
நண்ணுமோ ரைந்து நான்கு
நவிலுமிரு நாலுபரு கல்விரண் டொன்றேழு
நாலிரண் டோர் கருமமாம்
வண்ணமூன் றேழெட்டு நடுவைந் திரண்டெட்டு
மறமிரண் டாதி வாளாம்
மருவே ழிரண்டுநான் கெட்டுமொரு தேயமாம்
மகிழ்மூன்று நாலு மெட்டும்
கண்ணுறு மறிவாகு மைந்தொன்று மச்சமே
கமிரண் டெட்டு முத்தி
கவினுறு முள்ளத் தறிந்திதை யுரைத்திடிற்
கனதையுறு மிருமைக்கு மே.

வேம்பத்தூர், பி. பாஸ்கரய்யர்.

---

## பொது சமாசாரம்.

இம் மதுரைமாநகரிற் சென்ற சில வாரங்களாகச் சில தொத்து வியாதிகள் பரவிவருகின்றன. யாரோஒருவருக்குப் பிளேக்காண, அதைப் பிரமாதமாகப் பிரஸ்தாபிக்க,இந்நகரே நடுங்குகிறது. இதற்கேற்பச் சோழவந்தானிலும் அவ்வியாதிபரவ, அவ்வூர்ஜனங்கள் பற்பல ஊர்களுக்குத் தத்தம் வீடுகளைக் காலிசெய்து புறப்பட்டுவிட்டனர்.அன்னோரிற் பெரும்பாலோரும் மதுரைமாநகர்க்கு வந்துளதால், நகர்பரிபாலன சங்கத்தாருஞ் சுகாதார உத்யோகஸ்தரும், ஊரில் ஊசிகுத்தல் (Enoculation) முதலிய ஏற்பாடுகள்செய்துவருகின்றனர். சோழவந்தான் ஹைஸ்கூலில் VI Form ஒழிய மற்ற வகுப்புக்கள் மூடப்பட்டு ஷை வகுப்பு இங்கு கருப்பட்டிச் சத்திரத்தில் நடந்து வருகின்றது. ஜனங்கள் ஆண்டவனருளைப் பெரிதுமவாவுகின்றனர்,

# உள்ளூர், பொது சமாசாரம்.

சென்ற இரண்டுவருஷங்களாக இவ்வூர் வடக்கு ஆவணிமூல வீதி ஜவுளிவியாபாரம் மகா-ா-ா-ஸ்ரீ E. சங்கரநாராயணய்யர் அவர்கள் பக்திசிரத்தையுடன் நடத்திவரும் ஸ்ரீ தியாகராஜ, மஹோத்ஸவம் நிகழும் ருதிரோற்காரிஞு தைமீ 13உ முதல் மூன்றுநாள் உத்ஸவமாக நடந்தேறியது. பிரதிதினமும் காலையில் வேதவேதாங்கபாராயண கோஷத்துடன் நடந்த பூஜாகாலத்தில் எல்லா பாகவதர்களும் தியாகராஜஸங்கீத வித்யாலயமாணுக்கர்களும் ஸன்னிதானத்தில் கீர்த்தனங்கள் பாடினார்கள். ஹரிகேசனல்லூர் பிர்மஸ்ரீ முத்தய்யா பாகவதர் அவர்கள் அருமையான நூற்றுக்கணக்கான கீர்த்தனங்களுடன் ஷை ஸ்வாமிகளின் சரித்திரத்தை ரஸபாவபுஷ்டியுடன் கதா ... நடத்தினார்கள். தற்காலம் சென்னையிலிருக்கும் தஞ்சை மருத்தட்டாங்குடி பிர்மஸ்ரீ வசிஷ்ட பாரதி அவர்கள், "கம்பராமாயணம் கணையாழிகொடுத்தகட்டம்" கதாப்பிரசங்கஞ் செய்தார்கள். திருவிசனல்லூர் பிர்மஸ்ரீ ராமஸாமிசாஸ்திரிகள் அவர்கள் சுருதிலய ஸங்கீத விகடவித்யாப்பிரகடனஞ் செய்தார்கள். சிரவணஞ் செய்ய வந்த ஜனக்கூட்டம் அபரிமிதமாக விருந்தாலும் ஒவ்வொருவரும் வேறு ஆஸக்தியில்லாமல் அமைதியாகவிருந்து சிரவணஞ்செய்யும் போது சபைசித்திரார்ப்பிதம்போலவே யிருந்தது. பூஜாகாலத்திலும் வீதிப்பிரதக்ஷணகாலத்திலும் மதுரை நாகஸ்வரவித்வான் பொன்னுசாமி பிள்ளையின் குமாரன் நடேசனும், சிவகிரி நாகஸ்வரவித்வான் செல்லையாவும் அற்புதமாய் நாகஸ்வரம் வாசித்தார்கள்.

(ஒரு நிருபர் எழுதுகிறார்.)

## ஓர் பெரியார் மரணம்.

மதுரை:—இராமேஸ்வரத்தேவஸ்தானச் சமஸ்கிருதக்கல்லூரித் தலைவராயிருந்த, சமஸ்கிருதப் பண்டிதரும், தமிழில் விற்பன்னரும், ஆங்கிலத்திலதிதேர்ச்சி பெற்றவருமான ஸ்ரீ கிருஷ்ணமாச்சாரியாரவர்கள் நிகழும் உருத்ரோத்காரிஞு தைமீ 28உ பிற்பகல் மூன்றுமணிக்குப் பரமபதமடைந்தனர். இன்னாரையிழந்தது உலகம் வருந்தத்தக்கதாயிருக்கிறது. தலைவரைத் துறந்து வருந்துமவரில்லத்தார்க்கு இதனால் என் அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பி. பாஸ்கரய்யர்.

204516

உ

## வைசியன்.

இதொரு சிறந்த மாதாந்தரத் தமிழ்ப் பத, இப்பத்திரிகை இராமநாதபுரம் ஜில்லா அருப்புக்கோட்டையிலிருந்து வெளியாகின்றது. இதற்குப் பத்திராதிபர் S. V. K. வீரபத்திரன் செட்டியாரவர்கள். இப்பத்திரிகையில் பல நல்ல விஷயங்களறிவாளிகளால் எழுதப்பட்டிருக்கின்றன. ஜாதி விஷய விளக்க மதிகமிருக்கின்றது. தமிழ் நடை எல்லாரும் வாசிக்கத் தக்கதாக விருக்கின்றது. இதன் வருடச் சந்தா ரூ 2—0—0. வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற் கெழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.

பத்திராதிபர், "வைசியனுபீஸ்"
அருப்புக்கோட்டை
இராமநாதபுரம் ஜ.

உ

## ஸ்ரீ தியாகராஜ ஸங்கீத வித்யாலயம்,

வடக்காவணி மூல வீதி, மதுரை.

கனதனவான்காள்!

—o—

இம்மதுரைமா நகரின்கண் எல்லா நாகரீகங்களும் நிறைந்தோளிர்கின்றனவாயினும் மக்கட்குமிகவும்இன்றியமையாத ஆனந்தத்தை விளைவிப்பது நாதமயமான கீதமன்றோ, அத்தகைய சங்கீதத்தைப் பழமையான முறையுடனும் சாஸ்திரவிதி விலக்கில்லாமலும் என்னால் கூடிய வரையில் வேண்டிய பழமையான பாடங்களையும் (அதாவது) கீத, வர்ண, கீர்த்தனங்கள், ராகமாலிகைகள் ராகம், பல்லவி முதலானவைகளை நானும் என்னுடைய சகாக்களுமாக அப்பியாசிகளுக்கு முறையே சொல்லிக்கொடுத்து தற்காலம் சீர்கேடாயிருக்கும் சங்கீதத்தை கூடியவரையில் சீர்திருத்த எண்ணங்கொண்டு மதுரை வடக்கு ஆவணிமூல வீதியில் "ஸ்ரீ தியாகராஜ ஸங்கீத வித்யாலயம்" என்ற பெயரோடு ஒரு சங்கீத வித்யாசாலையை ஸ்தாபித்திருக்கிறேன். அப்பியாசம் செய்யும் ஆண், பெண் இருபாலர்களுக்கும் அவரவர்களுக்கு தனியான காலங்கள் ஏற்படுத்தியிருக்கிறேன். மற்றவிவரங்கள் நேரிலும், அல்லது கடிதம் மூலமும்தெரிந்துகொள்ளலாம்.

ஹரிகேசநல்லூர். L. முத்தையா பாகவதர்,
வடக்கு ஆவணிமூல வீதி, மதுரை,

## உள்ளூர், ளூருக்கு அறிக்கை.

...யைகளை நாங்கள், பலருக்கு அனுப்பிவந்த ...து தாங்கள் பெற்றுக்கொண்டதாகவும், தங்களை சென்ற .ரர்களாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் ...தி ஜவுளிடன் சிலரிடமிருந்து சந்தாத் தொகையும் வந்துள்ளது. ...ற்றும் அங்ஙனமே பதில் விடுப்பார்களானால், எங்கள் காரியாலயத்தில் வேலைத்தொந்தரை சிறிது மட்டுப்படும் என்று நம்புகிறோம். சந்தாத்தொகையை மணியார்டர் மூலம் அனுப்பினால் ரூ. 2—2—0 ஆகும். வி. பி.யில் பெற்றுக்கொள்வதானால் 2-5-0 என்று அறியவும். நமது "தமிழரசு"ப் பத்திரிகைக்கு எட்டுச் சந்தாதர்கள் சேர்த்துக் கொடுப்பவருக்கு ஒருவருடத்துப் பத்திரிகை ...த் தொகையின்றி யனுப்பப்பெறும். இங்ஙனம்.

பாகவீ்பத்தூர், சிலேடைப்புலி, பிச்சுவையர் குமாரர்,

...டன் ...ஸய்யங்கார், ...சிரியர். } பாஸ்கரய்யர், பொறுப்பாளர்.

29. மேலாவணி மூல வீதி, மதுரை.

---

## கலிங்கத்துப்பரணி.

(பண்டித அ. கோபாலையர் பதிப்பு) " இப்பதிப்பில் அரும்பொருள் விளக்கமும் குறிப்புரைகளும் நன்கு விளங்கவைக்கப்பட்டிருக்கின்றன. இந்நூலைப் பதிப்பித்துள்ள முறை சாலவும் போற்றத் தக்கதாயிருக்கிறது. இந்நூல் தமிழறிஞர் ஒவ்வொருவருடைய புத்தக சாலையிலும் இருக்கவேண்டுவது மிகவும் அவசியம்." (நவசக்தி 6—7—23)

பண்டித. அ. கோபாலையர்,
"செந்தமிழ் மந்திரம்"
இராபர்ட்ஸன்பேட்டை, மயிலாப்பூர், சென்னை.

---

## நன்னூல் சுருக்கம்.

இது, மதுரைக் காலேஜ் தமிழ்ப்பண்டிதர்கள் சு. ஸ்ரீநிவாசையங்கார், பி. பாஸ்கரய்யர் இவ்விருவராலும் நன்னூலிலுள்ள சூத்திரங்களில் மாணவர்க்கு அவசியமாக வேண்டிய சூத்திரங்களை மாத்திரம் திரட்டிச் சுருக்கப்பெற்றுள்ளது. இதன் விலை அணா 12. இது கிடைக்குமிடம், இ. மா. கோபால கிருஷ்ணக்கோன், புத்தக வியாபாரம், புதுமண்டபம், மதுரை.

மதுரை தெற்குக்கோபுரவாசல், தொட்டியன் கிணற்றுத்தெரு,
மீனலோசனி அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பெற்றது.